RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 30, 12 மே 2023 இதழ்:- 03

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances,
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

## பொலிசாரால் கைது செய்யப்பட்ட வெடுக்குநாறிமலை பூசகர் நீதிமன்றத்தால் விடுவிப்பு! வழிபாட்டிற்கு தடையில்லை!



வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகர் மற்றும் ஆலய நிர்வாக உறுப்பினர் ஒருவர் நெடுங்கேணி பொலிஸாரால் 11 மே 2023 வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர். வெடுக்குநாறிமலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கேஸ்வரரின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விக்கிரகங்கள் மீண்டும் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து ஆலயத்தில் பூசை நிகழ்வுகள் (7ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டில் உள்ளவர்கள் சிறிதளவு அதிக பணத்திற்காக காணிகளை மாற்றானுக்கு விற்காதீர்கள்- சித்தார்த்தன் எம்.பி




10 பேருடன் நடக்கும் போராட்டங்களினால் அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படாது. பெருமெடுப்பிலான போராட்டங்களை அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் அத்தோடு சிறிதளவு பணம் அதிகமாக கிடைக்கிறது என்பதற்காக உங்கள் காணிகளை மாற்று சமூகத்தினருக்கு விற்க வேண்டாமென, தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

07 மே 2023 கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார். மேலும் குறிப்பிடுகையில் (4ம் பக்கம் பார்க்க)

## தோல்வியடைந்த ரணிலின் தந்திரம்! மஹிந்தாவுடன் முரண்பட்டார் நாமல்!

அனைத்துலக நாணய நிதிய உடன்படிக்கைக்கு மீதான வாக்கெடுப்புக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு திரட்டுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவை பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையாண்ட ராஜதந்திரம் தோல்வியுற்றதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ (9ம் பக்கம் பார்க்க)



## வடக்கு கிழக்கை உள்ளடக்கி பரந்துபட்ட பேச்சுக்கள்! ஜனாதிபதி - தமிழரசுக்கட்சி சந்திப்பில் இணக்கம்!

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE


THINKING OF
SELLING OR BUYING A HOME?
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
20 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Markham & Eglinton
Scarborough $525,000
Bedrooms: 3 Washrooms: 2
Big, Bright And Beautiful Condo
Dundas/Hurontario St
Mississauga $639,000
Bedrooms: 3 Washrooms: 2
Very Spacious Bright Condo
King St. S & Queen St. S
Hamilton $699,900
Bedrooms: 2 Washrooms: 2
Platinum Condos at DT Hamilton
Bridge St W & Woolwich St
Kitchener $799,000
Bedrooms: 3 Washrooms: 3
Freehold Townhouse End Unit
Yonge St / Queens Quay
Toronto $978,000
Bedrooms: 2 Washrooms: 2
Modern Living By The Lake!
Queens Quay & Lower Sherbourne
Toronto $849,900
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit
Chinguacousy & William Pkwy
Brampton $1,075,900
Bedrooms: 4 Washrooms: 3
End-Unit Townhouse, Corner Lot!
River Street & Highway 12
Brock $1,350,000
Bedrooms: 5 Washrooms: 4
Walkout Basement
Meadowvale / 401
Scarborough $1,899,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Open Concept Layout.
Bur Oaks/Markham Rd
Markham $550,000
Bedrooms: 1 Washrooms: 1
Newer Modern Condo Building
Finch & Pharmacy
Scarborough $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Living & Dining
Grey Highlands
Markdale $7,200,000
Dollarama And Tim Hortons
Newly Built Tim Hortons Building
Birchmount/Lawrence
Scarborough $639,000
Bedrooms: 2 Washrooms: 2
Upgraded And Maintained Unit
Mccowan & Ellesmere
FOR LEASE
Scarborough $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout
Dixie Rd & Kingston Rd
FOR LEASE
Pickering $1,850
Bedrooms: 1 Washrooms: 1
Beautiful Recently Renovated
Victoria Park / Innismore
FOR LEASE
Scarborough $1,300
Bedrooms: 1 Washrooms: 1
Great Location! Newly Renovated
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**



**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**


# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப்!



எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ ரான விவேக் ராமசாமி களமிறங்கி யுள்ளார். இந்நிலையில் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப், விவேக் ராமசாமியை பாராட்டியுள்ளார்.

தேர்தலில் போட்டியிட குடியரசுக் கட்சி யின் அதிபர் வேட்பாளர் தேர்தலுக்கு அவர் விண்ணப்பித்துள்ளார். இந்த வேட்பாளர் தேர்தலுக்கு அக்கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் பலர் விண்ணப்பித்துள்ளனர்.

மற்றொரு இந்திய வம்சாவளியினரான நிக்கி ஹாலேயும் அதிபர் வேட்பாளர் தேர்தலுக்கு குடியரசு கட்சி சார்பில் விண்ணப்பித்துள்ளார்.

இந்நிலையில் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் விவேக் ராம சாமியை தனது சமூக வலைத்தள பக்கத்தில் பாராட்டி பதிவிட்டுள்ளார்.

விவேக் ராமசாமி எனக்குப் பிடித்த மானவர். அவரைப் பற்றி கூறுவதற்கு நல்ல விடயங்களே உள்ளன. அண் மைய அதிபர் வேட்பாளர் தேர்தலில் அவர் சிறப்பாகச் செயல்பட்டார். அதிபர் ட்ரம்ப்' குறித்தும் ட்ரம்ப் நிர்வாகம் குறித்தும் அவர் நல்ல விடயங்களை மட்டும் கூறக்கூடியவர். அது தான் அவரிடம் எனக்கு மிகவும் பிடித்தது. அதனால் தான் அவர் சிறப் பாகச் செயல்படுகிறார் என டிரம்ப் பதிவிட்டுள்ளார்.

# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பாலியல் குற்றவாளியென நீதிமன்றம் தீர்ப்பு





அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனாலட் டிரம்ப் பாலியல் வன்முறை யில் ஈடுபட்டார் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

1990களில் நியுயோர்க்கின் பல்பொருள் அங்காடியில் பத்தி எழுத்தாளர் ஒரு வரை டிரம்ப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினார் என நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது.

பேர்க்டோவ் குட்மனின் ஆடை மாற்றும் அறையில் டிரம்ப் ஈ ஜீன் கரோலை பாலியல்வன்முறைக்கு உட்ப டுத்தினார் என நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது.

பாதிக்கப்பட்ட நபர் தன்மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் பொய் என தெரிவித் தமைக்காக டிரம்பிற்கு எதிராக அவதூறு வழக்கினை தாக்கல் செய்ய லாம் என நீதிமன்றம் தெரிவித்துள் ளது. பாலியல் குற்றச்சாட்டுகள் தொட ர்பில் டிரம்ப் குற்றவாளி என நீதி மன்றம் அறிவித்துள்ளமை இதுவே முதல் தடவை.

இன்று உலகிற்கு உண்மை தெரிய வந்துள்ளது என டுவிட்டரில் ஈ ஜீன் கரோல் பதிவிட்டுள்ளார். இது எனக்கு மாத்திரம் வெற்றியல்ல பாதிக்கப்பட்ட வர் தெரிவித்ததை நம்பாததால் துயரை அனுபவித்த ஒவ்வொரு பெண்ணிற் கும் இந்த தீர்ப்பு ஒரு வெற்றி என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அந்த எழுத்தாளரின் குற்றச் சாட்டை புரளி மற்றும் பொய் என்று அழைத்த டொனால்ட் டிரம்ப் அவ தூறு வழக்கை எதிர்கொள்ளத் தக்க வர் ஆகிறார் என்றும் நீதிமன்றம் தெரி வித்துள்ளது.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பெண் கட்டுரையாளருக்கு இழப்பீடாக டொனால்ட் டிரம்ப் ஐந்து மில்லியன் அமெரிக்க டாலர்களை அளிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட நீதிபதிகள் அமர்வில் ஆறு ஆண்கள் மற்றும் மூன்று பெண் நீதிபதிகள் இடம் பெற்றிருந்தனர். மூன்று மணி நேர வாதங்களுக்குப் பிறகு நீதிமன்றம் அதன் தீர்ப்பை அளித்தது.

இதேவேளை 2024ஆம் ஆண்டு நடை பெறவுள்ள அதிபர் தேர்தலில் போட்டி யிடும் நோக்கில் இருக்கும் டிரம்ப்புக்கு இந்த தீர்ப்பு நிச்சயமாக பாதிப்பு ஏற்படுத்தும் என்றே கருதப்படுகிறது.


டிரம்ப்புக்கு எதிரான இந்தத் தீர்ப்பு குடியரசு கட்சியின் உறுப்பினர்களிடம் இருந்து அவருக்கு கிடைக்கும் அடிப்படை ஆதரவை அது எந்த வகையிலும் பாதிக்காது. இருப்பினும் குடியரசு கட்சியில் இருக்கும் அவரது போட்டியாளர்கள், இந்த தீர்ப்பை அவருக்கு எதிராக வலுவாகப் பயன் படுத்தும் வாய்ப்புக்கள் உள்ளன. பல்வேறு விஷயங்கள் ஒன்றாக இணை ந்து டிரம்புக்கு எதிராக ஒட்டுமொத்த பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது,' என்கிறார் தெற்கு டகோட்டா மாநிலத் தைச் சேர்ந்த குடியரசு கட்சியின் செனட் உறுப்பினர் ஜான் துனே. அதிபர் தேர்தலின் போது யாரை தேர்வு செய்யவேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்.'

'டிரம்ப் மீண்டும் வெற்றி பெறுவார் என நான் நம்பவில்லை, அடிப்படை ஆதரவை மட்டும் நம்பி ஒரு தேர்த லில் ஒருவர் வெற்றிபெறும் வாய்ப்பி ல்லை,' என்கிறார் டெக்சாஸ் மாநிலத் தைச் சேர்ந்த குடியரசு கட்சியின் செனட்டர் ஜான் கார்னின். தற்போதைய தீர்ப்பின் அடிப்படையில் அல்லது மற்ற விசாரணைகளில் வரவிருக்கும் தீர்ப்பின் அடிப்படையில் டிரம்ப் எந்த நிலைப்பாட்டை எடுப்பார் என்பதை விட அவருக்கு எதிரான அனைத்து ஆதாரங்களையும் எதிர் தரப்பு வழக்க றிஞர்கள் உறுதியாகப் பயன்படுத்து வார்கள் என்றே நம்பப்படுகிறது.


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# வெளிநாட்டில் உள்ளவர்கள் சிறிதளவு அதிக பணத்திற்காக காணிகளை மாற்றானுக்கு விற்காதீர்கள் 10 பேருடன் நடக்கும் போராட்டங்களால் அரசுக்கு நெருக்கடி ஏற்படாது என்கிறார் சித்தார்த்தன்!



10 பேருடன் நடக்கும் போராட்டங்களினால் அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படாது. பெருமெடுப்பிலான போராட்டங்களை அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் அத்தோடு சிறிதளவு பணம் அதிகமாக கிடைக்கிறது என்பதற்காக உங்கள் காணிகளை மாற்று சமூகத்தினருக்கு விற்க வேண்டாமென, தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

07 மே 2023 கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார். மேலும் குறிப்பிடுகையில்,

சில காலத்தின் முன்னர் வரை இங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். தமிழ் பௌத்த சின்னங்களை ஆக்கிரமிப்பதற்காகத் தான் பௌத்த விகாரைகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. பௌத்தர்களே இல்லாத இடங்களில் அவை கட்டப்படுகின்றன.

விகாரைகளை கட்டி, அதை பராமரிக்க மெதுமெதுவாக ஆட்களை கொண்டு வந்து, சிங்கள பிரதேசங்களாக்கும் நடவடிக்கைகள் நடந்து வருகிறது. இந்த ஆட்சியில் பல விடயங்கள் நிறுத்தப்படலாமென பலர் நினைத்தனர். ஆனால் நிறுத்தப்படவில்லை. ஜனாதிபதிக்கு பல முறை முறையிடப்பட்டும், அது கவனிக்கப்படவில்லை.

இவற்றை நிறுத்த நாம் முயற்சிகள் எடுக்க வேண்டும். பேச்சுவார்த்தை, சாத்வீக வழி, பாராளுமன்றத்தின் ஊடாக முயற்சிக்க வேண்டும். அவற்றை செய்து கொண்டிருந்தாலும், அவற்றின் வேகம் போதாது என நினைக்கிறேன். நான் கந்தரோடையில் இருக்கிறேன். இந்த கிராமத்திலுள்ள பெரும்பாலான மக்களிற்கு இந்த பிரச்சினை சரியாக புரியவில்லை. எப்படி சிங்கள பௌத்த மத அடையாள மாற்ற முயற்சிகள் நடக்கிறது என்பது அவர்களுக்கு விளங்கவில்லை. அது மாத்திரமல்ல, சற்று அதிக பணம் கிடைக்கிறது என்றால் காணிகளை விற்கிறார்கள். முக்கியமாக வெளிநாட்டில் உள்ளவர்கள். வெளிநாட்டில் உள்ள ஒருவர்தான் கந்தரோடையில் விகாரை கட்டப்படவுள்ள காணியையும் விற்றவர். வெளிநாட்டிலுள்ள பலர், இங்குள்ள காணிகளை பிற சமூகத்தவர்களுக்கு விற்பதால் ஏற்படும் அபாயத்தை புரிந்து கொள்ளாமல் தொடர்ந்து விற்று வருகிறார்கள். சில இடங்களில் காணிகள் விற்கப்பட்டுள்ளதை அறிகிறோம். நல்லூரிலும் விற்கப்படுகிறது.

இங்குள்ள இராணுவத்தினர் வெறும் காணிகளை அடையாளம் கண்டு, அவற்றின் உரிமையாளர்களை அடையாளம் கண்டு, அவற்றை வாங்கும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, சிறியளவு பணம் அதிகமாக கிடைக்கிறது என்பதற்காக மாற்று சமூகத்தினருக்கு விற்பதை நிறுத்துங்கள்.

இங்கு பௌத்த விகாரைகள் கட்டுவதற்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும். இப்போது நடக்கும் போராட்டங்கள் மிகச்சிறியவை. 3,5,10 பேருடன் நடக்கும் போராட்டங்களினால் அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படாது. பெருமெடுப்பிலான போராட்டங்களை அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும்


பௌத்த விகாரைகள் கட்டப்படுவது என்பது ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் தமிழர்கள் வாழும் பகுதிகளை ஆக்கிரமித்து கட்டப்படுகின்றது என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும். இதற்கமைய பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரை ஒன்றை அமைத்து அந்த விகாரையை பேணி பாதுக்காக்கும் வகையில் பௌத்த பிக்குகளை கொண்டு வந்து கொஞ்சம் கொஞ்சமாக தமிழர் பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இதற்கமைய இந்த அரசாங்கத்திலாவது தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்ப்பார்கப்பட்ட போதிலும் அதற்கான எந்தவித நடவடிக்கையில் முன்னெடுக்கப்படவில்லை என்றார்.

## அரசின் முழுமையான ஆதரவுடன் கட்டப்பட்ட தையிட்டி விகாரையை அகற்ற முடியாது



யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை ஒரு போதும் அகற்றமுடியாது என பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.குறித்த திஸ்ஸ விகாரை அரசின் முழுமையான அனுமதியுடன் இராணுவத்தினரின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டது. அத்துடன் இனவாத, மதவாதக் கண்ணோட்டத்துடன் இதனை நோக்குவதை தமிழ்க் கட்சிகளும் அவர்களது ஆதரவாளர்களும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தனியார் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மேற்படி விகாரையை அகற்றி அந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்களால் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.இந்நிலையில் இந்தபோராட்டம் குறித்து கருத்து தெரிவித்துள்ள சவேந்திர சில்வா, குறித்த திஸ்ஸ விகாரை அரசின் முழுமையான அனுமதியுடன் இராணுவத்தினரின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டது என்றார்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

12 மே 2023 வெள்ளிக்கிழமை - வைரவர் மடை
உபயம்:- பிரணவி மயில்வாகனம் குடும்பம்

16 மே 2023 செவ்வாய்க்கிழமை:- பிரதோஷ விரதம்

18 மே 2023 வியாழக்கிழமை - அமாவாசை விரதம்

02 யூன் 2023 வெள்ளிக்கிழமை - வைகாசி விசாகம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தமிழ்க்கட்சிகள் மக்களைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள்?

தையிட்டியில் விகாரை ஒன்றை நிர்மாணித்திருப்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து குறித்த இடத்தில் குழுமியிருக்கின்றனர்.

முதலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இது தொடர்பில் பொலிஸாருடன் முரண்பட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழரசு கட்சியினரும் தையிட்டிக்கு சென்று தமது எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர்.

யுத்தம் முடிவுற்ற பின்னரான கடந்த 14 வருடங்களாக பௌத்த மயமாக்கல் ஒரு தொடர் அரசியல் பிரச்னையாகவே இருந்து வருகின்றது.

ஒரு விகாரை நிர்மாணிக்கப்படுகின்றது என்றால் அவ்வாறான ஆக்கிரமிப்பு வடிவங்கள் தொடரப் போகின்றன என்பதே அதன் பொருளாகும்.

தமிழ்த் தேசிய அரசியல் எழுச்சி வேர் கொண்ட காலத்திலிருந்து அதனைத் தோற்கடிப்பதற்கான இராணுவ வழிமுறையை விஸ்தரித்து வந்த சிங்கள ஆட்சியாளர்கள் மறுபுறம் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், விகாரைகளின் மூலம் சிங்கள மேலாதிக்கத்தை நிரந்தரமாக்குவதற்கான திட்டங்கள் கிழக்கில் முஸ்லிம்களை கைக்குள் போட்டுக் கொள்ளுதல் எனப் பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்து வந்திருக்கின்றனர்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன ஒரு முறை சிங்களவர்களை நோக்கிக் கூறியிருந்தார் அதாவது, நீங்கள் எல்லைகளை நோக்கி செல்லாவிட்டால் எல்லைகள் உங்களை நோக்கிவரும்.

இது அடிப்படையில் ஆட்சியாளர்களுக்கான மாகியவல்லியின் ஆலோசனை. அதாவது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவ முகாம்களை நிர்மாணிப்பதல்ல முக்கியம் இராணுவத்துக்கு விசுவாசமான குடிகளை உருவாக்க வேண்டும். இதன் மூலம் மாகியவல்லி கூறும் ஆலோசனை என்ன? அரசியல் சூழ்நிலைகள் மாறுகின்ற போது, இராணுவ முகாம்களை அகற்ற நேரிடும் ஆனால், அவ்வாறான சூழலில் இராணுவத்துக்கு விசுவாசமான குடிகள் அப்படியே இருப்பர்.

உண்மையில், அவர்கள் தான் உண்மையான இராணுவமாவர்.

இந்த ஆக்கிரமிப்பு தத்துவத்தின் அடிப்படையில் தான் சிங்கள ஆட்சியாளர்கள் ஒவ்வொரு நகர்வுகளையும் முன்னெடுத்து வந்திருக்கின்றனர்.

இந்த ஆக்கிரமிப்பு தத்துவத்தின் அடிப்படையில்தான் இராணுவ முகாம்கள் இருக்கின்ற ஒவ்வோர் இடங்களிலும் புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றன.

தங்களின் வழிபாட்டுக்கென வைக்கப்படும் சிலைகள், பின்னர் சிறிய விகாரையாக மாறும் அதன் பின்னர் பெரிய விகாரையாக மாறும். இது தான் மாகியவல்லியின் அணுகுமுறை.

இடதுசாரித்துவம், பாசிசம் பற்றியெல்லாம் வகுப்பெடுத்த முன்னாள் இயக்கங்களின் தலைவர்களுக்கு இந்த சிறிய உண்மை கூடவா புரியவில்லை? இத்தனை வருட அனுபவங்களுக்கு பின்னரும் இதனை தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளவில்லை என்றால், இவ்வாறானவர்கள் தொடர்ந்தும் அரசியல்வாதிகளாக இருப்பதில் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மையிருக்க முடியுமா? தையிட்டியில் பௌத்த விகாரையொன்று அமைப்பட்டதாக தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கூச்சலிடுகின்றனர்.

விகாரை நிர்மாணிக்கப்பட்டு கலசம் வைக்க முற்படும் போது தான், இவர்கள் அந்த இடத்தில் கூடி சத்தமிடுகின்றனர். இந்த விகாரைக்கு அடிக்கல் நாட்டப்பட்ட போது அரசியல்வாதிகள் என்ன செய்து கொண்டிருந்தனர்? பின்னர் கட்டுமான வேலைகள் முன்னெடுக்கப்பட்ட போது, என்ன செய்தனர்? 2010ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமான வேலைகள் முடிவுற்று கலசம் வைக்கப்படும் போது தான் நமது அரசியல்வாதிகளுக்கு ஆக்கிரமிப்பின் காரம் உறைத்திருக்கின்றது.

ஒருவேளை விகாரைக்கு கலசம் வைப்பது சத்தமின்றி இடம் பெற்றிருந்தால் தையிட்டி விகாரை விவகாரம் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் நினைவிலேயே இருந்திருக்காது போலும்.

இவர்களின் அரசியல் பொறுப்புணர்வை என்னவென்பது? சிங்கள ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதற்காக ஜனநாயக வழியில் போராடுவதில் தவறில்லை.

போராடுவது தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவென்றால் அதனை அரசியல்வாதிகள் கையிலெடுப்பதில் தவறில்லை. ஆனால் விகாரை கட்டுவதை அனுமதித்துக்கொண்டு விகாரை கட்டும் வரையில் அமைதியாக இருந்துவிட்டு அதற்கு எதிராக குரலெழுப்புவதானது அடிப்படையில் சிங்கள ஆட்சியாளர்களின் திட்டங்களுக்கு மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஒப்பானதாகும்.

அத்துடன், வாக்களித்த மக்களை முட்டாளாக்கும் செயலுமாகும். மக்களை முட்டாளாக்க எண்ணினால் ஒரு நாள் மக்கள் அனைத்து அரசியல்வாதிகளுக்கும் நல்ல பாடமொன்றை புகட்டக்கூடும்.

# பதவிகளை தக்க வைக்க பயன்படுத்தும் இராஜதந்திரத்தை தீர்வு விடயத்திலும் பயன்படுத்துங்கள் - குகநாதன் தெரிவிப்பு!



தங்களது பதவிகளை தக்க வைக்க பயன்படுத்தும் இராஜதந்திரங்களை தமிழரின் தீர்வு விடயத்திலும் தமிழ் கட்சிகள் பயன்படுத்த வேண்டும் என பிரபல தொழிலதிபரும் டான் குழுமத் தலைவரும் மூத்த ஊடகவியலாளருமான எஸ்.எஸ். குகநாதன் தெரிவித்தார்.

ரெலோவின் ஏற்பாட்டில் இடம் பெற்ற ரெலோ கட்சியின் தலைவர் ஸ்ரீசபாரத்தினம் அவர்களின் 37 வது ஆண்டு நிறைவு தின நிகழ்வில் விசேட விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அண்மையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் பல கட்சிகள் ஒன்றிணைந்து குத்து விளக்கு சின்னத்தில் கூட்டமைப்பை உருவாக்கினார்கள் தமிழரசு கட்சியினர் நினைத்தார்கள் ரெலோ, புளொட் கட்சிகள் என்ன செய்தாலும் இலங்கை தமிழரசு கட்சியை விட்டுவெளியே போக மாட்டார்கள் என்று ஆனால் திடீரென்று தமிழரசு கட்சியினை விட்டு வெளியே வந்து குத்து விளக்கு சின்னத்தில் ஒன்றிணைந்து விட்டார்கள் குத்துவிளக்கு சின்னத்தை ஆரம் பிக்கும் போது பயன்படுத்திய அரசியல் ராஜதந்திரத்தை தமிழரின் உரிமையினை பெறுவதற்கும் பயன்படுத்த வேண்டும் குறிப்பாக உங்களுடைய பதவிகளை தக்க வைப்பதற்காக பயன்படுத்தும் ராஜ தந்திரங்களை தமிழ் மக்களின் உரிமைகளை பெறுவதற்கும் பயன்படுத்த வேண்டும் என தமிழ் மக்கள் சார்பில் நான் கோரிக்கை விடுகின்றேன் மாகாண சபை யினை எவ்வாறு காப்பாற்ற வேண்டும் என அனைவரும் சிந்திக்க வேண்டும்.

பௌத்த மயமாக்கள் என்பது ஒரு பிரச்சனைக்குரிய விடயம் தான் அதனை நிறுத்த தான் வேண்டும் அதனை தடுத்து நிறுத்துவதற்கான வழிகள் எங்களிடம் இருக்கும் போது அதை தவிர்த்து பௌத்த மயமாக்கல் நடக்குது என கத்திக் கொண்டிருக்கின்றோம் இருப்பதை வைத்துக் கொண்டு எமக்கு வருகின்ற ஆபத்துக்களை தவிர்த்து கொள்ள முடியும் என சிந்திப்பதை விடுத்து வேறு விதத்தில் நாங்கள் கத்திக் கொண்டிருக்கின்றோம் எந்த வகையிலும் அந்த விடயங்கள் தமிழ் மக்களுக்கு உதவாது நடக்கக்கூடிய விடயங்களை நாங்கள் சிந்திக்க வேண்டும் ஜனாதிபதி அவர்கள் 13 வது திருத்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்துவேன் என்று கூறுகின்றார் எனவே ஜனாதிபதி ரணில் அவர்களின் ஆட்சியின் போது இந்த 13-வது திருத்த சட்டத்தை நடைமுறைப் படுத்த அனைவரும் ஒற்றுமைப் பட வேண்டும் புதிய அரசியல் யாப்பு என்பது இப்போதைக்கு சாத்தியமற்ற விடயம் எனவே ஏற்கனவே அரசியல் அமைப்பில் இருக்கின்ற ஒரு விடயத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒற்றுமைப் பட வேண்டும்

மாகாண சபை என்பது தான் எமது தீர்வுக்குரிய ஒரு துரும்பு, பௌத்த மய மாக்கல் மற்றும் தமிழரின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மாகாண சபை உறுதுணையாக இருக்குமாக இருந்தால் அதனைப் பாதுகாப்பதற்கு கட்சிகள் இணைந்து ஒற்றுமையாக முயற்சிக்க வேண்டும் எனவே மாகாண சபை தேர்தலில் முக்கியமான கட்சிகள் இணைந்து எவ்வாறு வாக்கினை பெற்று மாகாண சபையினை கைப்பற்றலாம் என சிந்திக்க வேண்டும் நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டிய தேவை என்ன? அந்த ஒற்றுமைக்கான முயற்சியில் ஈடுபடுவது தான் இப்போது உள்ள சவால்.

# சிங்கள இராஜதந்திரத்தின் தொடர் வெற்றி?

குருந்தூர் மலையில் சில நாட்கள் தமிழ் அரசியல் வாதிகள் முகாமிட்டனர். ஆனாலும் குருந்தூர் மலையில் விகாரை கட்டப்படுவதை தடுக்க முடியவில்லை. பின்னர் வெடுக்குநாறி மலை உச்சியில் குழுமினர் உடைக்கப்பட்ட சிவலிங்கத்தை மீளவும் வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து, அந்த விடயம் முடிவுக்கு வந்தது. இப்போது தையிட்டியில் கட்டப்பட்ட விகாரையை எதிர்த்து, அங்கு குழுமி, இது யாருடைய காணி - இதில் எவ்வாறு விகாரை கட்டாலாமென்று கேள்வியெழுப்பிக் கொண்டிருக்கின்றனர். அதுவும் விகாரை கட்டப்படும் வரையில் அமைதியாக இருந்து விட்டு, இப்போது சத்தமிடுகின்றனர்.

ஆனால் சிங்கள ஆளும் வர்க்கமோ, தமிழ் அரசியல்வாதிகளின் சத்தங்கள் எவற்றையும் பொருட்படுத்தாமல், அவர்களது வேலையை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. ஆனால் மறுபுறும் தமிழ் அரசியல் வாதிகளோ, பருவகாலத்தில் படையெடுக்கும் பறவைகள் போன்று, புத்தர் சிலை,விகாரை இவற்றுக்கு அப்பால் எந்தவொரு பிரச்சனையும் இல்லையென்பது போல், செயல் பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தமிழர்களை இப்போது சிங்கள ராஜதந்திரம் எந்த இடத்தில் நிறுத்தியிருக்கின்றது? ஒரு காலத்தில், சிங்களவர்களை மோடர்கள் என்று கூறிக் கொள்வதில் யாழ்ப்பாணத்தவர்கள் குதூகலமடைந்த காலமொன்று இருந்தது. ஆனால் வரலாற்றின் தராசில் தமிழர்களின் மேதமை பெறுமதியற்றதாகிக் கொண்டே செல்கின்றது.

ஒரு புறம் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை காணப் போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். இது தொடர்பில் தமிழ் கட்சிகளை பேச்சுக்கு அழைக்கின்றார். ஆனால் மறுபுறமோ, தமிழ் கட்சிகளின் தலைவர்கள் விகாரைகளுக்கு முன்னால் அமர்ந்து, நீதி கோரிக் கொண்டிருக்கின்றனர். விகாரைகளை தாண்டி அவர்களால் சிந்திக்க முடியவில்லை.

யுத்தத்திற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் என்பது, அடிப்படையில், நீதியை கோரும் அரசியலாகவே தன்னை முன்வைத்தது. ஆனால் நீதியை கோரும் அரசியலை முன்னெடுக்கும் தமிழ் அரசியல்வாதிகளில் பலரும், புலம்பெயர் அமைப்புக்களில் பலவும் விடுதலைப் புலிகளின் விசுவாசிகளாகவே, தங்களை முன்னிறுத்தி வருகின்றனர். அதிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினரோ, ஒரு படி மேல் சென்று, விடுதலைப் புலிகளின் நீட்சியாகவே தங்களை முன்னிலைப்படுத்த முயற்சித்து வருகின்றனர். அதற்கான தகுதி தங்களுக்கு மட்டுமே இருப்பதாகவும் கூறிக்கொள்கின்றனர்.

ஆனால் இந்த இடத்தில் நீதி கோரும் தமிழ் தேசிய அரசியல் தர்க்கரீதியில் பலவீனமான ஒன்றாகவே இருக்கின்றது. யுத்தம் முடிந்து, 14 வருடங்கள் கடந்த பின்னரும் கூட விடுதலைப் புலிகள் தொடர்பான சர்வதேச பார்வையில் ஒரு சிறிய மாற்றமும் ஏற்படவில்லை. இப்போதும் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாகவே நோக்குகின்றது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது சிறிய கருணையை கூட அவர்கள் காண்பிக்கத் தயாராக இல்லை. 32 நாடுகளில் விடுதலைப் புலிகள் இப்போதும் ஒரு பயங்கரவாத அமைப்பு. இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் விசுவாசிகளாக காண்பித்துக் கொள்ளும் தமிழ் தேசிய அரசியல் கோரும் நீதியை, மேற்குலகம் எவ்வாறு புரிந்து கொள்ளும்? விடுதலைப் புலிகள் மீதான ஆதரவும், தமிழர்களின் நீதி கோரும் செயல்பாடும் ஓரிடத்தில் இருப்பது சிக்கலானது. 2009இற்கு பின்னரான, தமிழ் அரசியல் லொபியில் இது ஒரு சிக்கலான கூறாகும். இது தொடர்பில் தமிழ் புத்தஜீவிகள் என்போரிடமும் தெளிவான அரசியல் புரிதலில்லை. பெரும்பாலானவர்கள், அரசியலில், மதில் மேல் பூனையாக இருக்க முயற்சிப்பதால் விடயங்களை ஆழமாக நோக்கத் தவறி விடுகின்றனர். மதில் மேல் பூனையாக இருப்பது சுகமானதொரு நிலைப்பாடாகும்.

எப்போது வேண்டுமானாலும் எந்தப் பக்கத்திற்கும் தாவிக் கொள்ளலாம். ஆனால் தமிழ் சமூகம் முன்னோக்கி பயணிப்பதற்கு, இவ்வாறானவர்களால் ஒரு போதுமே பங்களிக்க முடியாது. இதனை சிங்கள ஆளும் வர்க்கம் மிகவும் திறம்பட பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது. தமிழர்களை விகாரைகளை தாண்டி சிந்திக்க முடியாதளவுக்கு முடக்கியிருக்கின்றது.

# வெடுக்குநாறி மலையில் சிவலிங்கம் தொடர்பில் கொந்தளிக்கும் தேசிய சுதந்திர முன்னணி! மகா நாயக்கர்களைச் சந்திக்க முடிவு!

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மத மரபுரிமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை தடுக்க மகாநாயக்க தேரர்கள் தலையிட வேண்டும். இவ்விடயம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் மகா நாயக்க தேரர்களை நேரில் சந்தித்து உரையாடவுள்ளோம் என தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

நாட்டில் பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புராதன பௌத்த மரபுரிமைகள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன.

இந்தியாவின் இந்துத்துவவாத கொள்கைக்கு ஈர்க்கப்பட்டவர்களின் ஆலோசனைகளுக்கு அமைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் பௌத்த மரபுரிமைகள் அழிப்பு பணிகளை துரிதமாக முன்னெடுத்து செல்கிறார்கள்.

வவுனியா வெடுக்குநாறி மலையில் பௌத்த மரபுரிமைகளுக்கு முரணான வகையில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த சின்னங்கள் மற்றும் மரபுரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் சுதேச தமிழர்கள் பௌத்த மதத்துக்கு எதிராக செயற்படவில்லை. தமிழ் அடிப்படைவாதிகளே இந்தியாவின் இந்துத்துவவாத கொள்கைக்கு அடிபணிந்து இவ்வாறு முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட வகையில் பௌத்த மரபுரிமை



களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட கவனம் செலுத்த வேண்டும். ஒரு தரப்பினரை திருப்பதிப்படுத்துவதற்காக பௌத்த மதத்துக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கிறதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

பௌத்த மத உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை மக்கள் அனைவருக்கும் உண்டு. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மத மரபுரிமைகளுக்கு எதிரான முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை தடுக்க மகாநாயக்க தேரர்கள் தலையிட வேண்டும். இவ்விடயம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் மகாநாயக்க தேரர்களை நேரில் சந்தித்து உரையாடவுள்ளோம் என்றார்.

### வெடுக்குநாறி மலையில் சரத்வீரசேகர

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தலைமையில் சிங்கள மக்கள் சிலர் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு சென்றுள்ளனர். வவுனியா, ஒலுமடு வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் சிவலிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்கள் உடைத்து அழிக்கப்பட்டிருந்தன. இதனை அடுத்து கடந்த ஏப்ரல் 27ம் திகதி வவுனியா வெடுக்குநாறி மலையிலிருந்து அகற்றப்பட்ட சிலைகளை மீண்டும் அங்கு வைக்குமாறு வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது

மேலும் பூஜை வழிபாடுகளுக்கு எவ்வித இடையூறுகளையும் விளைவிக்காதிருப்பதற்கும், அங்கு பாதுகாப்பு மேற்பார்வைகளை மாத்திரம் மேற்கொள்வதற்கும் பொலிஸாருக்கு கட்டளையிடப்பட்டது. இந்நிலையில் சரத் வீரசேகர தலைமையில் ஒரு சிலர் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு சென்றுள்ளனர்.

விகாரை உரிய அனுமதிகளைப் பெற்று அமைக்கப்பட்டது.அதனை, அகற்றக் கோருவது நியாயமற்ற விடயமாகும். என முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எல்லா விடத்திற்கும் இனவாத மற்றும் மதவாதக் கருத்துக்களைக் கூறுவதை தமிழ்க் கட்சிகள் உடன் நிறுத்த வேண்டும். அமைதியான முறையில் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்லும் தமிழ் மக்களை போராட்டம் என்ற போர்வையில் அவர்களை வன்முறைக்கு கொண்டு செல்வது தான் தமிழ்க் கட்சிகளின் நோக்கமாக இருக்கின்றது.



### தமிழ்அரசியல்வாதிகள் வாயை மூடி வைத்திருக்க வேண்டும் என்கிறார் மகிந்தா

தமிழ் அரசியல்வாதிகள் தமது அரசியல் நகர்வுகளுக்காக தமிழ் மக்களைப் பலிக்கடாவாக்குகின்றனர். இதனை, தமிழ் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். யாழ்ப்பாணம் தையிட்டியில் உள்ள திஸ்ஸ

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி முன்னெடுக்கப்பட்டுள்ள தொடர் போராட்டம் தொடர்பில் தென்னிலங்கை ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதில் வாங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# தமிழர்களை அவர்களது தாயகத்தில் இருந்து வெளியேற்றவா புதிய புத்தர் கோவில்கள்?

வடக்கின் பல பகுதிகளில் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு புதிதாகக் கட்டப்படும் புத்த கோயில்கள் தமிழர்களை அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்தும் விரட்டியடிப்பதற்கான முயற்சியா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: இலங்கை சுதந்திரம் அடைந்தபொழுது டொனமூர் அரசியல் சட்டம் அமுலில் இருந்தது. சிறுபான்மை இனத்திற்கு எதிராக எந்த சட்டமும் கொண்டுவரக்கூடாது என்று அந்த அரசியலமைப்பில் 29ஆம் சரத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் அந்த 29ஆவது சரத்து இருக்கத்தக்கதாகவே ஒட்டுமொத்த மலையக தமிழர்களின் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாகப்பட்டார்கள். மேலும் அவர்களது சிவில் அரசியல் சமூக உரிமைகளும் மறுதலிக்கப்பட்டது.

இதன் பின்னர், தென்பகுதியில் இருந்த தமிழ் மக்களின் வர்த்தகங்களை குறி வைத்து அவற்றை இல்லாமல் செய்து 1956இலும் 1977, 1981, 1983 போன்ற பல சந்தர்ப்பங்களில் தென்பகுதியில் இருந்த வடக்கு-கிழக்கு தமிழர்கள் மாத்திரமல்லாமல் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களும் அவர்களது தாயக பிரதேசமான வடக்கு-கிழக்கிற்கு கப்பல் மூலமும் விமானம் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இப்பொழுது வடக்கு-கிழக்கைக் குறி வைத்து அங்குள்ள புராதன சைவ ஆலயங்களை உடைத்து, நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி, தான்தோன்றித்தனமான முறையில், தனிநபர்களின் காணிகளையும் கபளீகரம் செய்து, அவற்றில் புத்தகோயில்களைக் கட்டுவது மாத்திரமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பலநூறு ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து அதற்கு இராணுவ பாதுகாப்பையும் வழங்கி தொடர்ச்சியாக சிங்கள குடியேற்றங்களையும் செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு யுத்தத்திற்குப் பின்னர், ஹம்பாந்தோட்டை போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட சிங்கள மக்களை வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குடியேற்றி வருகின்றார்கள்.

கிழக்கில் ஏற்கனவே முக்கியமான பகுதிகளில் மிகப் பாரியளவிலான சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய சிங்கள பிரதிநிதித்துவங்களும் உருவாக்கப்பட்டு விட்டது.




இப்பொழுது வடக்கு மாகாணத்தில் மீண்டும் ஒரு முறை தமிழீழக் கோரிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருக்க வேண்டும் என்றால் வடக்கு மாகாணத்தின் மக்கள் தொகையில் 25வீதம் சிங்கள மக்களாக இருக்க வேண்டும் என அரச இராணுவ உயர் மட்டங்கள் முடிவெடுத்துச் செயற்படுகின்றன.

இதன் வெளிப்பாடாகவே வடக்கு-கிழக்கில் 1000 புத்தவிகாரைகளைக் கட்டுவதற்கு 2018ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கோடிக்கணக்கான நிதியும் ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் வடக்கின் குடிசனப் பரம்பலை மாற்றி அவர்களது நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து வடக்கையும் ஒரு கலவர பூமியாக மாற்றி தமிழ் மக்களை அங்கிருந்தும் விரட்டுவதே மாறி மாறி ஆட்சிக் கட்டிலில் ஏறும் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கின்றது. ஏற்கனவே யுத்தத்தின் காரணமாக ஏறத்தாழ 1.5 மில்லியன் மக்கள் அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்து விரட்டப்பட்டு விட்டார்கள்.

இலங்கை அன்னிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமென்பதற்காக தமிழ் மக்களும் இன மத பேதமின்றி போராட்டக்களத்தில் முன்னின்று போராடினார்கள். அந்தக் காலத்தில் தமிழ் மக்கள் தனி நாட்டிற்காகவோ அல்லது சுயாட்சிக்காகவோ போராடவில்லை.

ஆனால் சுதந்திரமடைந்ததன் பின்னர், சிங்கள அரசியல் தலைமைகள் கொண்டு வந்த தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை சட்டதிட்டங்களும் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் காட்டிய பாரபட்சமும், (22ம் பக்கம் பார்க்க)

# கௌசிகன் மறைந்தார்



ஈழநாடு பத்திரிகையின் நீண்டகால அபிமான வாசகரும் சோதிடம் சம்பந்தமான கட்டுரைகளை எழுதி வந்தவரும் என் இனிய நண்பருமான கௌசிகர் என்று அன்பாக அழைக்கப்படும் ஜெயசீலன் அவர்கள் 03 மே 2023 இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றேன்.

பஞ்சாங்கத்தை விஞ்ஞான அறிவு கொண்டு ஆராய்ந்து ஆய்வுக்கட்டுரைகளை எழுதியவர் மட்டுமல்ல பழமை மாறக் கூடாது என்று காலத்திற்கு ஒவ்வாத கருத்துக்களைப் பதிவு செய்து சோதிடர்களைச் சாடியும் எதிர்வாதம் புரிந்தும் சோதிடம் என்பது உண்மை. ஆனால் சோதிடம் சொல்பவன் எல்லாம் சோதிடன் அல்ல என்பதை ஆணித்தரமாக - தர்க்க ரீதியாக மறுத்துரைத்து வந்த சோதிட விற்பனராகவும் திகழ்ந்தவர் கௌசிகர் ஆவார்.

தனது பெயரிலேயே கௌசிகர் பஞ்சாங்கம், கலண்டர் மாதக் கணிப்பு எனப் பல்வேறு துறைகளில் ஆழக்கால் பதித்தவர் கௌசிகர். அன்னாரது இழப்பு குடும்பத்தினருக்கு மட்டுமல்ல தமிழ்ச்சமூகத்திற்கும் ஓர் பேரிழப்பு என்பதில் ஐயமில்லை.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர், நண்பர்களுடன் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்.

ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் டொரண்டோ கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை ஜெயசீலன் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவன் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07 மே 2023 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

# நினைவேந்தலைக் கைப்பற்ற முன் பாராளுமன்றத்தைக் கைப்பற்றுங்கள் - யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்




நினைவேந்தலைக் கைப்பற்ற முன் நடாளுமன்றைக் கைப்பற்றுக!

நினைவேந்தல்களில் பொது ஒற்றுமை பேணப்பட வேண்டும்

ரணிலின் தந்திரங்களை புரிந்து தமிழ் பிரதிநிதிகள் ஒரு மித்து செயற்படுக

தனி வாத்தியம் இசைக்க முயற்சிக்க வேண்டாம்

தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படாத சூழ்நிலையில், நினைவேந்தல்களைக் கைப்பற்ற வேண்டும் என கூறும் தரப்பு, சிதறிப் போய்க் கிடக்கும் நடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை முதலில் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 08 மே 2023 இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே, கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் உப தலைவர் தர்சன் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

'சிதறியிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒன்றுபடுத்தியது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மாத்திரமே.இன்று பல்வேறுபட்ட தரப்புக்கள் பல்வேறு கதைகளைக் கூறிக் கொண்டு இருக்கின்றனர்.

நினைவேந்தல்களைக் கைப்பற்ற வேண்டும் என்றெல்லாம் கூறுகின்றார்கள். அவர்கள் முதலில் முழுமையாக பாராளுமன்றத்தைக் கைப்பற்றி விட்டு நினைவேந்தல்களைக் கைப்பற்றுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

இன்று 22 ஆசனங்கள் (வட-கிழக்கில்) காணப்படுகின்றன. 22 ஆசனங்களும் எந்தவொரு தமிழ்க் கட்சியாலும் நிரப்பப்பட்டுள்ளதா? ஆகவே தமிழ் மக்கள் மத்தியில் எந்தவொரு அபிலாசைகளும் எந்தவொரு கட்சியாலும் இதுவரை நிறைவேற்றப்படாத சூழ்நிலையில் (நினைவேந்தலைக் கைப்பற்றுதல்) இவ்வாறான கருத்துக்கள் புறக்கணிக்கப்பட வேண்டியவை.

தமிழர் தாயகத்திலே இன்று எத்தனையோ போராளிகள் எத்தனையோ பாதிக்கப்பட்ட தரப்புக்கள் அமைதியாக இருந்துகொண்டிருக்கும் சூழ்நிலையில், எங்கேயோ இருந்த தரப்புக்கள் தான் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கின்றன.

பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமாக, பொதுக்கட்டமையுடன் இணைந்து (22ம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும் உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 12வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை

# பொலிசாரால் கைது செய்யப்பட்ட

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடர்ச்சியாக இடம் பெற்று வந்ததுடன், 10 மே 2023 புதன்கிழமை சங்காபிஷேக நிகழ்வும் இடம்பெற்றது. அதில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை விசாரணை ஒன்றிற்காக ஆலய நிர்வாகத்தினரை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு நெடுங்கேணி பொலிஸாரால் அன்றைய தினம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து ஆலயத்தின் பூசகர் மற்றும் நிர்வாக உறுப்பினர் உட்பட இருவர் நேற்றைய தினம் காலை நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு சென்றநிலையில், அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அவர்களை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் அன்று வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்ட போது இந் நிலையில் குறித்த வழக்கிலிருந்து இருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் வவுனியா சட்டத்தரணிகள் பலர் ஆலயம் சார்பில் ஆஜராகியிருந்தனர்.

குறித்த வழக்கு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சிரேஸ்ட சட்டத்தரணி தி. திருவருள், குறித்த வழக்கின் முறைப்பாட்டாளர்களாக ஆலய நிர்வாகமும் பூசாரியும் இருப்பதனால் அதே வழக்கில் அவர்களை சந்தேக நபர்களாக பெயரிடுவது வழக்கிற்கு முரணாக அமையும் என்பதை சுட்டிக் காட்டிய நீதவான் வழக்கிலிருந்து அவர்களை விடுவித்திருந்தார்.

அத்துடன் ஆலயத்தில் கட்டுமானங்களையோ மாற்றங்களையோ ஏற்படுத்தக்கூடாது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், பூஜை வழிபாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. இதேவேளை இறை விக்கிரகங்களை உடைத்தவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையினை விரைந்து எடுக்குமாறும் காவல்துறையினருக்கு பணிக்கப்பட்டது எனவும் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கை உள்ளடக்கி பரந்துபட்ட பேச்சுக்கள்! ஜனாதிபதி - தமிழரசுக்கட்சி சந்திப்பில் இணக்கம்!



09 மே 2023 - கொழும்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கி நல்லிணக்கம் மற்றும் அதிகாரப்பகிர்வு தொடர்பில் பரந்துபட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதிக்கும் தமிழரசுக்கட்சிக்கும் இடையிலான சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி அதிகாரப்பகிர்வு விவகாரத்தைப் பொறுத்த மட்டில் கடந்தகால ஆவணங்களை ஆராய்வது குறித்தும், முன்னாள் ஆளுநர்கள் மற்றும் முதலமைச்சர்களையும் பேச்சுவார்த்தையில் இணைத்துக் கொள்வது பற்றியும் இதன்போது பேசப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளடங்கலாக வட, கிழக்கு மாகாணங்களில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று செவ்வாய் கிழமை (09) பி.ப 3.30 மணியளவில் ஜனாதிபதிசெயலகத்தில் நடை பெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன், கலையரசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இருப்பினும் ஜனாதிபதியுடனான இச்சந்திப்பில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொண்டிருக்கவில்லை. இச்சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட கட்சியின் ஊடகப்பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் கூறுகையில்

ஜனாதிபதியுடனான செவ்வாய்கிழமை (09) சந்திப்பின்போது வியாழன் (11) மற்றும் வெள்ளிக்கிழமை (12) நடைபெறவுள்ள சந்திப்பு குறித்துப் பேசினோம். இச்சந்திப்புக்களுக்கு வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் எமது எதிர்ப்பை வெளிப்படுத்தினோம்.

அது மாத்திரமன்றி நல்லிணக்கம் மற்றும் அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் பேச வேண்டுமெனில் நாம் கிழக்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து தான் அச் சந்திப்புக்களில் பங்கேற்போம் என்றும் உறுதியாகக் கூறினோம். அதனையடுத்து 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சந்திப்புக்களுக்கு வடக்கு, கிழக்கு ஆகிய இருமாகாணங்களையும் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுவதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

அதன்படி 11 ஆம் திகதி நல்லிணக்கம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், அரசியல்கைதிகள் விவகாரம், காணிப்பிரச்சினை, பயங்கரவாதத்தடைச்சட்டம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்படும். அதே போன்று 12 ஆம் திகதி அதிகாரப்பகிர்வு தொடர்பில் கலந்துரையாடப்படும்.

மேலும் அதிகாரப்பகிர்வு குறித்துப் பேசும்போது எந்தெந்த ஆவணங்கள் குறித்துக் கவனம் செலுத்தவேண்டும் என்று ஜனாதிபதி எம்மிடம் வினவினார். எனவே இவ்விவகாரத்துடன் தொடர்புடைய முக்கிய கடந்தகால ஆவணங்கள் தொடர்பில் நாம் எடுத்துரைத்தோம் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை நீங்கள் தானே அதிபர். உடனடியாக காணிகளை விடுவிக்குமாறு கட்டளையிட்டு காணிகளை விடுவியுங்கள் என அதிபர் ரணில் விக்ரமசிங்கவிடம் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா வலியுறுத்தியுள்ளார்.

இதன் போது, சற்றுக் கோபமடைந்த ரணில், முதலில் உங்கள் கட்சிக்குள் இருக்கின்ற பிரச்சினைகளை தீருங்கள். அதனைக் கூட உங்களால் தீர்க்க முடியாத நிலையில் உள்ள போது, ஓர் அதிபராக எவ்வாறு நீங்கள் கூறுவது போன்று இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும் என மாவையை நோக்கி வினா எழுப்பியுள்ளார்.

இது இவ்றிருக்க ரணில் விக்ரமசிங்கவின் தந்திரோபாய அரசியல் தற்போது லண்டனிலும் எதிரொலிக்கின்றது. கொழும்பிலிருந்து லண்டனுக்கு சென்றவுடன் தனது நேரத்தை விரயமாக்காத ரணில் விக்ரமசிங்க, இரவு விருந்தொன்றுடன் லண்டனில் தமிழ் புத்திஜீவிகள் என தம்மை அடையாளப்படுத்தும் சில முகங்களுடன் பேச்சுக்களை நடத்தி இருக்கின்றார்.

இந்தச் சந்திப்பில் பங்கெடுத்த தமிழ் முகங்களின் பெயர் விபரங்கள் இதுவரை வெளிவரவில்லை. ஆயினும் சந்திப்பு இடம் பெற்றமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கும் தமிழ் முகங்களும் இந்தச் சந்திப்பில் இருந்ததாக தெரிய வருகிறது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# தோல்வியடைந்த ரணிலின் தந்திரம்! மஹிந்தாவுடன் முரண்பட்டார் நாமல்!

அனைத்துலக நாணய நிதிய உடன்படிக்கைக்கு மீதான வாக்கெடுப்புக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு திரட்டுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவை பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையாண்ட ராஜதந்திரம் தோல்வியுற்றதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆதரவாக வாக்களித்தமையால் நாமல் ராஜபக்ஷ அவருடன் முரண்பட்டதாகவும் கொழும்பில் அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

## நாணய நிதிய வாக்களிப்பின் போது திரைமறைவில் நடந்த சங்கதிகள்!

அனைத்துலக நாணய நிதியத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை மீது வாக்கெடுப்பு நடத்தி, பல அரசியல் திட்டங்களை மனதில் கொண்டு அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார். இதற்காக மிகவும் நுட்பமாக அவர் காய்களை நகர்த்தினார். இதில் முக்கியமான ஒன்று, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களை அதற்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்து, இரண்டு அல்லது மூன்றாக அக்கட்சியை உடைப்பது.

இரண்டாவது திட்டமானது, சஜித்தின் கட்சிக்குள் பெரும் செல்வாக்கு செலுத்தி கட்சியை உடன்படிக்கைக்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்து அவரை ஆட்டம் காணச் செய்வது.

மூன்றாவது திட்டம், அவர்களின் பொருளாதாரத் திட்டத்தை எப்போதும் எதிர்க்கும் ராஜபக்ஷக்களும், பொதுஜன பெரமுன கட்சியினரும், அரச நிறுவனங்களை விற்பனை செய்வது, மக்கள் நலன்களை வெட்டுவது, அரச பணியாளர்களை நீக்குவது போன்ற அவர்களின் பொருளாதாரத் திட்டத்தை உள்ளடக்கிய நாணய நிதிய உடன்படிக்கைக்கு ஒப்பந்தத்துக்கு ஆதரவாக கை ஓங்கச் செய்து, தண்ணீர் மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளை அதிகரிக்கச் செய்து இதன் ஊடாக பொதுஜன பெரமுன கட்சி கடந்த காலத்தில் முன்வைத்த கொள்கையே சரியானது என நம்ப வைப்பது.

எவ்வாறாயினும், பொதுஜன பெரமுன தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருந்த வியூகம் 100 வீதம் வெற்றியடையக் கூடியதாக காணப்பட்டது. அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கும், அரச பணியாளர்களை குறைப்பதற்கும், மக்கள் நலனுக்கான வெட்டுக்களுக்கும் எதிராக எப்போதும் நிற்கும் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பெரும்பான்மையினர் நாணய நிதிய உடன்படிக்கைக்கு ஆதரவாகவே வாக்களித்தனர்.

எனினும், தொடக்கத்தில் மஹிந்தவும் நாமலும் அனைத்துலக நாணய நிதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளை அறிந்து வைத்து இருந்துள்ளனர். நாணய நிதியத்தின் உடன்படிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது அதற்கு ஆதரவாக வாக்களிக்கக் கூடாது. வாக்களிப்பின் போது, நாடாளுமன்றத்தில் இருக்கக் கூடாது என்பது மஹிந்த மற்றும் நாமலின் நிலைப்பாடு ஆகும். இதனை அறிந்த பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளரான சாகர காரியவசம் மற்றும் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் 12 பேரும் வாக்களிப்பின் போது நரடாளுமன்றத்தில் சமூகம் அளிப்பது இல்லை என்று முடிவு செய்தனர்.

மஹிந்தவும், நாமலும் இந்த முடிவை எடுத்ததற்கான காரணங்களும் இருந்தன. தயாரிக்கப்பட்ட அந்த உடன்படிக்கையை பெற்றுக் கொண்ட மகிந்த, தனது ஆட்சிக்காலத்தில் தமக்கு பொருளாதார ஆலோசனை வழங்கிய பல பொருளாதார நிபுணர்களிடம் அதனை ஆய்வு செய்யுமாறு பணித்தார்.

நீண்ட ஆய்வின் பின்னர் அதில் நாட்டுக்கு கேடு விளைவிக்கும் மற்றும் மஹிந்தவின் சிந்தனைக்கு எதிரான பல சரத்துக்கள் உள்ளடங்கியுள்ளதாக மஹிந்தவிடம் தெரிவித்திருந்தனர்.

உதாரணமாக, நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வது மாத்திரமல்லாது இலாபம் ஈட்டும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கும் இங்கே பிரேரிக்கப்பட்டுள்ளதாக அந்த பொருளாதார நிபுணர்கள் மஹிந்தவிடம் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அத்துடன், எதிர்காலத்தில் இந்த உடன்படிக்கைக்கு எதிராக பாரிய தொழிற்சங்கம் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு கிளம்பலாம் என்பதால் அதனைத் தவிர்க்கும் வகையில் மஹிந்த இந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்கக் கூடாது எனவும் அறிவுறுத்தியிருந்தனர்.

இதன்படி, மஹிந்த, நாமல் உள்ளிட்ட பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சுமார் 12 மூத்த தலைவர்கள் வாக்களிப்பின் போது நாடாளுமன்றத்துக்கு செல்வதில்லை என்று முடிவு எடுத்திருந்தனர். அந்த முடிவின்படி, வாக்களிப்பு நாளன்று, கண்டிக்குச் சென்ற மஹிந்த, தலதா மாளிகையை வழிபடுவது உள்ளிட்ட பல நிகழ்வுகளில் பங்கேற்றார்.

இந்தப் பின்னணியில், வெள்ளிக்கிழமை பிற்பகல் வாக்களிப்பின் போது, பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த பல மூத்த தலைவர்கள் நாடாளுமன்றத்தில் இன்மையாலும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு குழு உடன்படிக்கைக்கு ஆதரவாக வாக்களிக்காது விட்டால் வாக்களிப்பு தோல்வியடைந்து விடுமோ என்று அரசாங்கத்தின் முக்கியமானோர் அச்சமடைந்தனர்.

இதனால், அரசுக்கு 113 பெரும்பான்மை கூட கிடைக்காமல் போகும் நிலமை உருவாகியது. அதன்படி ஐக்கிய மக்கள் சக்தியின் குழுவொன்று அரசாங்கத்துடன் இணையும் திட்டத்தை அரசாங்கம் புறம் தள்ளி விட்டு மஹிந்தவையும் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களையும் நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரும் நடவடிக்கையை உடனடியாக முன்னெடுக்க வேண்டியிருந்தது. அதற்கு அரசாங்கத்தின் முக்கியமானவர்கள் பஸிலுக்கும் ராஜபக்ஷ குடும்பத்துக்கும் மிக நெருக்கமான மூன்றாம் தரப்பைப் பயன்படுத்தினர்.


அவர் ஊடாக பஸிலுக்கு உடனடியாக செய்தி அனுப்பிய அரசாங்கத்தின் முக்கியமானவர்கள், அனைத்துலக நாணய நிதிய உடன்படிக்கையின் வாக்கெடுப்பின் போது மகிந்தவையும் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த குழுவினரையும் எப்படியாவது நாடாளுமன்றத்துக்கு அழைத்து வர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து, கண்டியில் இருந்த மஹிந்தவை பஸில் உடனடியாக தொடர்பு கொண்டார். மஹிந்தவிடம் பஸில் நிலைமையை விளக்கினார். அனைத்துலக நாணய நிதியத்தின் நிபந்தனைகளை பொருட்படுத்தாமல் உடன்படிக்கைக்கு ஆதரவாக வாக்களிக்க மஹிந்தவை உடன்பட வைத்தார். அதன்படி, வெள்ளிக்கிழமை பிற்பகல் மஹிந்த உள்ளிட்ட பொதுஜன பெரமுனவின் மூத்த தலைவர்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழையவில்லை எனில், அனைத்துலக நாணய நிதியத்தின் உடன்படிக்கை 113 பெரும்பான்மை பலம் இல்லாமலேயே நிறைவேற்றப்பட்டிருக்கும். எவ்வாறாயினும், இங்கு காணப்பட்ட மற்றொரு நிகழ்வாக அனைத்துலக நாணய நிதியத்தின் உடன்படிக்கைக்கு மஹிந்த ஆதரவாக வாக்களித்த போதிலும், நாமல் ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டில் இருந்து சற்றும் பின்வாங்காமல் உறுதியாக இருந்து அதற்கு வாக்களிக்காது நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறினார்.

மேலும், கடைசி நேரத்தில் மஹிந்த தனது முடிவை மாற்றி உடன்படிக்கைக்கு ஆதரவாக வாக்களிக்க நாடாளுமன்றத்துக்கு வருகை தந்ததனை அறிந்த அறிந்த நாமல், உடனடியாக மஹிந்தவுக்கு செய்தி அனுப்பி வாக்களிக்காமல் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறுமாறு கேட்டுள்ளார். அதற்கு பதிலளித்த மஹிந்த, தற்போது நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளதால் உடன்படிக்கைக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக நாமலிடம் தெரிவித்தார்.


இதன் மூலம், ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளும் பிளவை ஏற்படுத்தி, அனைத்துலக நாணய நிதிய உடன்படிக்கைக்கு மஹிந்த மற்றும் பொதுஜன பெரமுன கட்சியினரின் வாக்குகளை அரசாங்கம் பெற முடிந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தியை உள்வாங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் முற்றாக தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த உடன்படிக்கைக்கு மஹிந்தவை ஆதரிக்கும் பணியை பஸிலிடம் ஒப்படைத்தது போன்று ஐக்கிய மக்கள்



சக்தியையும் சஜித்தையும் உடன்படிக்கைக்கு ஆதரவு கோரும் பணியை வஜிர அபேவர்தனவிடம் ஒப்படைத்திருந்தார் ரணில். அதன்படி சஜித் உள்ளிட்ட முழுக் கட்சியினரையும் இந்த உடன்படிக்கைக்கு ஆதரவாக வாக்களிக்க செய்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றுவதே வஜிரவின் பணியாக இருந்தது. இல்லை எனில் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஒரு குழுவை அரசாங்கத்திற்குள் உள்வாங்கி அக்கட்சியை இரண்டாகப் பிரிப்பது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அந்த திட்டம் தோல்வியடைந்தது.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

"இணுவில் திருவூர்"

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

06 மே 2023 முதல் 12 மே 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 57வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை பாலசிங்கம்

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தபொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களின் 57வது ஆண்டு நினைவுநாள் 16 மே 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கனகசபை பாலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி இராஜேஸ்வரி பாலச்சந்திரன் பிரசாத்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இராஜேஸ்வரி பாலச்சந்திரன்பிரசாத் அவர்களின் 31ம்நாள் நினைவுநாள் 12 மே 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்ப நண்பர் திரு குலா செல்லத்துரை குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இராஜேஸ்வரி பாலச்சந்திரன்பிரசாத் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் குடும்பத்தினர், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கெங்காதரன்

யாழ்ப்பாணம் மூளாயைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கெங்காதரன் அவர்களின் 21வது ஆண்டு நினைவாக சித்திரா பௌர்ணமி உபயமாக அன்னாரது குடும்பத்தினர் 09 மே 2023 செவ்வாய்க்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி கெங்காதரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் குடும்பத்தினர், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்தம்பி தவராஜா

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்தம்பி தவராஜா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 11 மே 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்தம்பி தவராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 15வது ஆண்டு நினைவஞ்சலி



### சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் யாழ்மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 15வது ஆண்டு நினைவு நாள் 08 மே 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்வரெத்தினம் செல்வகுமார்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 12 மே 2023 வெள்ளிக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவ னைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



05 மே 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி இந்துகா துஷியந்தனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி இந்துகா துஷியந்தன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானமும் வழங்கி மகிழ்ந்தார்



கனடாவில் வசிக்கும் திரு திருமதி கண்ணன் வத்சலா இணையர்களின் அன்புமகள் வினோகா கண்ணனின் பிறந்த நன்நாள் 25 ஏப்ரல் 2023 ஆகும். அன்றைய நாளுக்காக செல்வி வினோகா கண்ணன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து 06 மே 2023 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



07 மே 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி சிந்துஜா குணபாலசிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சிந்துஜா குணபாலசிங்கம் அவர்கள் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




08 மே 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ரவீந்திரன் பரமு அவர்களது 60வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திரு ரவி பரமு அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவும் குளிர்பானமும் வழங்கி மகிழ்ந்தார்



08 மே 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ரவீந்திரன் பரமு அவர்களது 60வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திரு ரவி பரமு அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவும் குளிர்பானமும் வழங்கி மகிழ்ந்தார்



08 மே 2023 திங்கட்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.முன்னாள் மேயர் திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 15வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



08 மே 2023 திங்கட்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.முன்னாள் மேயர் திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 15வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




08 மே 2023 திங்கட்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.முன்னாள் மேயர் திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 15வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 மே 2023 செவ்வாய்க்கிழமை சித்திராபௌர்ணமி உபயத்திற்காக யாழ். மூளாயைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி கெங்காதரன் அவர்களது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 மே 2023 வியாழக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்தம்பி தவராஜா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



12 மே 2023 வெள்ளிக்கிழமை புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்வரெத்தினம் செல்வகுமார் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



12 மே 2023 வெள்ளிக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இராஜேஸ்வரி பாலச்சந்திரன்பிரசாத் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அவர்களது குடும்ப நண்பர் திரு குலா செல்லத்துரை அவர்கள் திருமதி இராஜேஸ்வரி பாலச்சந்திரன்பிரசாத் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



05 மே 2023 வெள்ளிக்கிழமை சித்திராபௌர்ணமி உபயமாக ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியவதி நல்லையா அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி





## திருமதி துரையப்பா மங்கையற்கரசி
## திரு கார்த்திகேசு துரையப்பா

புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி துரையப்பா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 14 மே 2023 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாகவும் தந்தையார் திரு கார்த்திகேசு துரையப்பா அவர்களது நினைவாகவும் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள்.


திருமதி மங்கையற்கரசி துரையப்பா அவர்களினதும் திரு கார்த்திகேசு துரையப்பா அவர்களினதும் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.



உ
ஜெயதுர்க்கா துணை
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## ஜெயதுர்க்கா தேவஸ்தானம் மிசிசாகா

# விக்னவிநாயகர் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் 2023



**ஆரம்பம்**

**19 - 05 - 2023**



*திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்*
*காதலால் கூப்புவர் தம் கை.*

**பூர்த்தி**

**28 - 05 - 2023**



நிகழும் சோபகிருது வருடம் வைகாசி மாதம் 5ம் நாள்(19-05-2023)வெள்ளிக்கிழமை அன்று விக்னங்கள் தீர்க்கும் விக்னவிநாயகப் பெருமானின் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. இவ்வரிய திருநாட்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகைதந்து விநாயகப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

## விக்னவிநாயகர் அலங்கார உற்சவ விபரம்

**மாலை 5.30 அபிஷேகம் (ஸ்நபனம்), 7.00 பூஜை, 7.30 கலை நிகழ்ச்சி, 8.00 வசந்தமண்டபப் பூஜை, தொடர்ந்து அருள் மிகு விக்ன விநாயகர் வீதியுலா வருதல், பிரசாதம் வழங்குதல்.**

| | | | | |
|---|---|---|---|---|
| | 18-05-2023 | வியாழன் காலை | கணபதி ஹோமம் | இ.ராகவன் குடும்பம் |
| 1ம் திருவிழா | 19-05-2023 | வெள்ளி | மூஷிக வாகனம் | விசுவலிங்கம் குடும்பம் |
| 2ம் திருவிழா | 20-05-2023 | சனி | யானை வாகனம் | ம.மனோகரன் குடும்பம் |
| 3ம் திருவிழா | 21-05-2023 | ஞாயிறு | சிம்ம வாகனம் | இராஜேஸ்வரன் விஜித்தா குடும்பம் |
| 4ம் திருவிழா | 22-05-2023 | திங்கள் | பூதவாகனம் | வே.செல்வரட்ணம் குடும்பம், உறவினர்கள் |
| 5ம் திருவிழா | 23-05-2023 | செவ்வாய் | மாம்பழத் திருவிழா | அரியாலையூர் மக்கள் |
| 6ம் திருவிழா | 24-05-2023 | புதன் | மஞ்சம் | சதானந்தன் குடும்பம் |
| 7ம் திருவிழா | 25-05-2023 | வியாழன் | வேட்டை | கனேசன் சுப்பிரமணியம் |
| 8ம் திருவிழா | 26-05-2023 | வெள்ளி | சப்பறம் | காரை அன்பர்பள் |
| 9ம் திருவிழா | 27-05-2023 | சனி காலை | தேர்(இரதோற்சவம்) | பொதுஉபயம் (பக்தர்கள் உபயத்திற்கு பதியவும் |
| | | சனி மாலை | தேரடித் திருவிழா | |
| 10ம் திருவிழா | 28-05-2023 | ஞாயிறு காலை | 1008 சங்காபிஷேகம் | மு.ரஜிவீகரன் R.J Multi pac Inc |
| | | ஞாயிறு மாலை | பூந்தண்டிகை | அலங்கார வீதியுலா |
| | 29-05-2023 | திங்கள் காலை | பிராயச்சித்த அபிஷேகம் | வி.விஜியசேகர் குடும்பம் |
| | 30-05-2023 | செவ்வாய் | பூங்காவனம் | (R.J Multi Litho Staff) |
| | 02-06-2023 | வெள்ளி | வைரவர்மடை | கு.ராஜ்குமார் |

குறிப்பு: விக்கவிநாயகர் தேர்திருவிழா, அன்றைய நாள் கும்பாபிஷேக தினம் ஆகையால் சகல விக்கிரகங்களுக்கும் விஷேட அபிஷேகம் பூசை ஆராதனை நடைபெறும்

**சப்பறத் திருவிழா**
*5.00(மாலை) அபிஷேகம்(ஸ்நபனம்)*
*7.00(மாலை) மூலமூர்த்தி பூஜை*
*7.30(மாலை) கலைநிகழ்ச்சி,*
வசந்தமண்டப பூஜை இடம்பெற்று விநாயகர் சப்பறத்தில் வீதியுலாவரும் அருங்காட்சியும் இடம்பெறும்.

**தேர்த்திருவிழா**
*8.00(காலை) அபிஷேகம்(ஸ்நபனம்)*
*9.30(காலை) மூலமூர்த்தி பூஜை*
*10.30(காலை) வசந்தமண்டபபூஜை*
*11.30(மதியம்) தேர் வீதிவலம்.*
தொடர்ந்து பச்சைசாத்தப்பெற்று அவரோகணம் நிகழ்ந்து பஞ்சமுக அர்ச்சனைகள் இடம்பெறும்.

**1008 சங்காபிஷேகம்**
காலை 7.00 மணிக்கு அபிஷேகம் தொடர்ந்து
11.30 மணிக்கு மூலமூர்த்தி, வசந்த மண்டபப் பூஜைகள் நடைபெற்று வீதியுலாவரும் அருங்காட்சியும் இடம்பெறும்.

**தேர்த் திருவிழா பொது உபயம். இவ் உபயத்தில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் ஆலயத்தில் பதிவு செய்து நீங்களும் உபயகாரர்களாகி, சகல விக்கினங்களையும் தீர்க்கும் விக்ன விநாயகப் பெருமானின் தெய்வீக அருள் பெற்றுய்வீர்களாக!**
**ஓம் விக்ன விநாயக நம**

1808 Drew Road. Mississauga
905 612 1856

Gprinters 905 629 8089

# PREMIER DIAGNOSTIC NETWORK

PDXN

**647•660•0699**
www.pdxn.ca

Scan for Online Booking

## RADIOLOGY & CARDIOLOGY SERVICES

## எங்களுக்காக நாங்கள்!

**தமிழர்களின் நிர்வாகத்தில் நகரின் மத்தியில் நல்லதோர் மருத்துவ பரிசோதனை நிலையம்!**

ரேடியோலஜி, மற்றும் கார்டியோலஜி பரிசோதனைகளிற்காக நீங்கள் பரிந்துரைக்கப்பட்டால், ஆற்றலும், அனுபவமும் மிக்க நிபுணர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள தமிழர்களின் நிர்வாகத்தில் நடாத்தப்படும் எங்களின் சேவைகளை நாடுங்கள்.

**தமிழில் தொடர்பு கொள்ள அழையுங்கள்**

**647-494-9909**

- X-RAY
- ULTRASOUND
- BONE DENSITY
- ECHOCARDIOGRAM
- HOLTER MONITOR
- STRESS ECG
- ABPM (24H BLOOD PRESSURE MONITORING)

## PREMIER RADIOLOGY CLINICS

### BELLESMERE X-RAY, ULTRASOUND & BMD

North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 311 & 311A**
Scarborough, ON M1H 2V6
Tel: **416-289-2280**
Fax: **416-289-7321**

### BRIMLEY X-RAY, ULTRASOUND & BMD

South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7
Tel: **416-299-7677**
Fax: **416-299-7948**

Access & Share Your Imaging and Reports Online: **https://pdxn.ca/page/patient-imaging**

## PREMIER CARDIAC CLINICS

Tel: **416-289-3212** • Fax: **416-289-0815**

### BELLESMERE CARDIAC CLINIC

North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 307**
Scarborough, ON M1H 2V6

### BRIMLEY CARDIAC CLINIC

South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7

### ACCREDITATIONS

Cardiac Echo Quality Care and Service by: CorHealth Ontario

Radiology Medical Quality and Standard of Care by: The College of Physicians and Surgeons of Ontario

Affiliated Clinical Site: UHN University Health Network; The Michener Institute of Education at UHN

Accredited Ultrsound Training Program: Accreditation Canada

Infection Control and Cleaning Process by: Public Health Ontario

### FUNDED BY

Ontario Ministry of Health & Long Term Care

# Bolton Honda

65 Pillsworth Road, Bolton, ON, L7E 4E9

**Lease from 4.08% on select 2023 models**

## LEASE TO OWN



**$93**

weekly - Plus TAX

$0 down @ 6.58%

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr

CANADIAN BUILT

**2023 CIVIC LX Model**

## LEASE TO OWN

**$120**



weekly - Plus TAX

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr - 7.59%

**2023 CR-V**

## USED VEHICLES

Over 100 USED Vehicles

HONDA | TOYOTA
LEXUS | ACURA
BMW | AUDI

**2023 CR-V HYBRID Available**

**CIVIC**
20 in stock

**CR-V**
15 in stock

**ACCORD**
10 in stock

**ODYSSEY**
10 in stock

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

HONDA certified used vehicles come with 7 Years or 160,000 km Warranty



புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

tonymidtown@hotmail.com

**Tony Siva** 647.269.0749

Sales & Leasing Executive

# வெடுக்குநாறி மலையில் இருந்து தையிட்டிக்கு!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தை நொதிக்கச் செய்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான். போலீசாரோடு முரண்பட்டதன் மூலம் அதை உணர்ச்சிகரமான ஒரு விவகாரமாக மாற்றியதும் அந்தக் கட்சி தான். அதன் விளைவாகத் தமிழரசுக் கட்சியும் உட்பட ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்பகுதிக்கு வர வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நீதிமன்றம் தலையிடும் ஒரு நிலைமை உருவாகியது.

எனினும் போராட்டம் பெருமளவுக்கு கட்சிப் பிரமுகர்களின் போராட்டமாகவே இருந்தது. கொஞ்சம் தொண்டர்களும் காணப்பட்டார்கள். முன்னணி போலீசாரோடு முரண்பட்டதுங் கூட அதன் பாணியில் வழமையானது என்று சொல்லலாம். அரச படைகளோடு முரண்படுவதை ஒரு சாகசமாக முன்னணி செய்து வருகின்றது. இது போன்ற போராட்டங்களில் அவ்வாறான சாகசச் செயலுக்கும் ஒரு பொருள் உண்டு. அது போலீசாரை நிதானமிழக்கச் செய்யும்.அ தன் தக்க பூர்வ விளைவாக சிங்கள பௌத்த மயமாக்கல் மேலும் அம்பலப்படும் என்பது உண்மை. ஆனால் அறவழிப் போராட்டங்கள் மட்டுமல்ல ஆயுதப் போராட்டங்களும் சாகசங்களால் வெற்றி பெறுவதில்லை.

இது விடயத்தில் சில அடிப்படையான கேள்விகள் உண்டு. அந்த விகாரை திடீரென்று வானத்திலிருந்து தரைக்கு வரவில்லை. அது கடந்த நான்கு வருடங்களாக கட்டப்பட்டு வருகிறது. அதற்கு அத்திவாரம் வைத்த போதே அது விவகாரம் ஆக்கப்பட்டது. அதைக் கட்டியெழுப்பும் வரையிலும் ஏன் தமிழ்க் கட்சிகள் பார்த்துக் கொண்டிருந்தன? இப்பொழுதும் விகாரை முழுமையாக திறக்கப்படவில்லை. அதற்கு கலசம் வைக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்ட பொழுது தான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி களத்தில் இறங்கியது. நாவற்குழியிலும் அப்படித்தான்.

இதில் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அத்திவாரம் வெட்டப்படும் பொழுதும் அதைத் தடுக்க முடியவில்லை. அது கட்டி முடிக்கப்படுவதையும் தடுக்க முடியவில்லை. அது ஒரு மதம் சார்ந்த பொதுக் கட்டிடம் என்ற அடிப்படையில் அதை இனி அகற்றுவது மேலும் விவகாரமாகி விடும். எனவே இங்கு தொகுத்துப் பார்த்தால் தெரிய வருவது என்னவென்றால் தமிழ்க் கட்சிகளின் இயலாமை தான். தமிழ்க் கட்சிகளின் நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியல் தான் (Event based)

நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்ட பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அங்கு போனார். முரண்பட்டார். அது போலவே தையிட்டி விகாரை விவகாரத்திலும் தொடக்கத்திலேயே அது பிரதேசசபையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எனவே இது விடயத்தில் 5 ஆண்டுகள் தூங்கிக் கிடந்து விட்டு திடீரென்று விழித்த அரசியலை எப்படிப் பார்ப்பது

ஆயிரம் விகாரைகள் கட்டப் போவதாக ரணில் பல ஆண்டுகளுக்கு முன்பே தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார். அவர் சொன்னதைச் செய்கிறார். அது அரசுடைய தரப்பு. திணைக்களங்கள் அவர்களுடைய உபகரணங்கள். படைத்தரப்பு அதன் காவல்காரன். எனவே எல்லா வளங்களையும் கொட்டி அவர்கள் சொன்னதைச் செய்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறு சொன்னதைச் செய்யும் சக்தி உடையவர்களா? அதற்குத் தேவையான நீண்ட கால நோக்கிலான வழி வரைபடம் அவர்களிடம் உண்டா? இல்லையென்றபடியால் தான் அவர்கள் நிகழ்வுகளை மையமாக வைத்து எதிர்ப்பு அரசியல் செய்கின்றார்களா? அவர்கள் எதிர்த்த போதிலும் விகாரைகள், தாதுகோபங்கள் கட்டப்பட்டு



கொண்டேயிருக்கின்றன. தமிழ்க்கட்சிகளிடம் தெளிவான வழி வரைபடம் இல்லை என்பதைத் தான் தையிட்டி விவகாரம் நமக்கு உணர்த்துகின்றது. சிங்களபௌத்த மயமாக்கல் என்பது, தமிழ்மக்கள் ஒரு தேசமாக இருப்பதைச் சிதைக்கும் நோக்கிலானது. எனவே தமிழ்மக்கள் ஒரு தேசமாகத் திரண்டால் தான் அதைத் தடுக்கலாம். செல்வராஜா கஜேந்திரன் தையிட்டியில் வைத்து அதைச் சொன்னார். ஆனால் சொன்னால் மட்டும் போதாது. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்கு யார் தடை? ஏனைய கட்சிகளைத் துரோகிகள், ஒட்டுக் குழுக்கள், கைக்கூலிகள் என்றெல்லாம் கூறிக் கொண்டு எப்படி ஒற்றுமைப்படுவது? இனி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குள் கொண்டுவர முடியாது. ஒன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு பிரதான நீரோட்டக் கட்சியாக வளர்ச்சி பெற வேண்டும். அல்லது ஏனைய கட்சிகள் தாங்கள் ஒரு பெரிய கூட்டாக வளர்ச்சி பெற வேண்டும்.

எந்தக் கூட்டாக இருந்தாலும் அது தேசத்தை கட்டியெழுப்புவது என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட வேண்டும். நிச்சயமாக தேர்தல் வெற்றிக்கான கூட்டாக இருக்கக் கூடாது. அத்தகைய அடிப்படையில் கூட்டுக்களை உருவாக்கத் தவறியதன் விளைவாகத் தான் தேச நிர்மானத்திற்கான அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்குப் போக தமிழ் அரசியலால் முடியவில்லை.

தேசத்தை எப்படிக் கட்டியெழுப்புவது என்று சிந்தித்து அதற்குரிய வழி வரைபடத்தைத் தயாரித்து இருந்திருந்தால், சிங்கள பௌத்த மயமாக்கலை எதிர்கொள்வதற்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கியிருந்திருப்பார்கள். கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில் தான். நிகழ்வுகளை மையமாகக் கொண்டு எதிர்ப்பு அரசியல் செய்ய வேண்டிவந்தது. அதை ஒரு சட்ட விவகாரமாகச் சுருக்க வேண்டி வந்தது. இது ஒரு சட்ட விவகாரம் அல்ல. இது ஒரு அரசியல் விவகாரம். இதை அணுகுவதற்கு அரசியல் ரீதியான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். ஒரு கட்சியிடமும் அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லை என்பதைத் தான் தையிட்டியில் குந்தி கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நமக்கு உணர்த்தினார்கள். சில தொண்டர்களைத் தவிர மக்களை அங்கே கொண்டு வர முடியவில்லை. எனவே இங்கு தேவையானது என்னவென்றால், தேசத்தை நிர்மாணிப்பதற்குரிய கட்டமைப்புகள் எவை எவை என்று கண்டு அவற்றை கட்டியெழுப்புவது தான். இது பல ஆண்டுகளாக நான் எழுதி வரும் ஒரு விடயந் தான். ஒரு தேசத்தை நிர்மாணிக்கத் தேவையான கட்டமைப்புகள் எவையெவை? ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக்க அம்சங்களைப் பலப்படுத்துவதற்குரிய கட்டமைப்புக்களே அவை. ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக அம்சங்கள் எவை? நிலம்மொழி இனம் அல்லது சனம் பொதுப் பண்பாடு பொதுப் பொருளாதாரம் போன்றவை தான். எனவே மேற்கண்ட அம்சங்களை பலப்படுத்தவும் பாதுகாக்கவும் தேவையான சுயகவசங்கள் என்று வர்ணிக்கத்தக்க கட்டமைப்புகளை புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பங்களிப்போடு உருவாக்கலாம். தேசத்தை நிர்மாணிக்க வேண்டும் என்று கூறும் ஒரு கட்சி அதற்கு தேவையான பொருத்தமான கட்டமைப்புகளை ஏன் இதுவரை உருவாக்கவில்லை?



வடக்கு - கிழக்கு மாகாணங்களில்

ஆயிரம் விகாரைகள்

அமைக்க நடவடிக்கை

ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட

தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

அதற்கு பதில் வேண்டும். தையிட்டியில் தமிழ்மக்கள் ஒரு தேசமாக நிற்கவில்லை. கட்சிப் பிரமுகர்கள்தான் நின்றார்கள். அது ஒரு நிகழ்வு. அது போல பல நிகழ்வுகளை நாங்கள் கடந்த 14 ஆண்டுகளில் கண்டு விட்டோம். நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியலின் தோல்வியே இது. இப்பொழுது தேவையாக இருப்பது மூலோபாய ரீதியில் சிந்தித்து கட்டமைப்புகளை உருவாக்கி நீண்ட கால அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்புவது தான். அவ்வப்போது நிகழ்வுகளுக்கு எதிர்வினையாற்றும் அரசியல் எனப்படுவது தேசத்தை நிர்மாணிப்பதற்கு உரியதல்ல. தேசத்தை நிர்மாணிப்பது என்பது எதிர்ப்பு அரசியல் மட்டுமல்ல. அது கட்டியெழுப்பும் அரசியலுந்தான் (Constructive).எதைக் கட்டியெழுப்புவது? எதிர்க்கத் தேவையான கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புவது. இன்றைக்கு தையிட்டி. நாளைக்கு வேறொரு இடத்தில் வேறு ஒரு பௌத்த மதக் கட்டுமானத்துக்கு அத்திவாரம் வைக்கப்படும். அப்பொழுதும் அந்த நிகழ்வுக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் போராடக் கூடும். வழக்குத் தொடுக்கக்கூடும். போலீசோடு தள்ளு முள்ளுப்படக் கூடும். வழக்கில் வெல்லவும் கூடும். ஆனால் அவை யாவுமே நிகழ்வுகள் தான். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தொடர் செயற்பாடுகளாக இருக்கப் போவதில்லை. சிங்களபௌத்த மயமாக்கலைத் தடுக்கப்போவதில்லை.

இப்பொழுது வெடுக்குநாறி மலையில் இருந்து கவனக்குவிப்பு தையிட்டிக்குத் திரும்பி விட்டது. அதுகூட சிங்கள பௌத்த மயமாக்கலுக்குச் சாதகமான ஒரு விஷயம் தான். தமிழ் மக்களின் கவனத்தை, தமிழ்க் கட்சிகளின் கவனத்தை அவ்வப்போது வெவ்வேறு நிகழ்வுகளின் மீது திசை திருப்புவது. தமிழ் மக்களின் கூட்டுக் கவனத்தைச் சிதற விடுவது.

அண்மை வாரங்களாக தமிழ்ச் சமூகத்துக்குள் காணப்படும் சாதி ஏற்றத் தாழ்வுகளைக் குறித்தும் சாதி ஒடுக்குமுறைகளைக் குறித்தும் விமர்சனங்கள் வெளிவருகின்றன. தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையுந் தான். சமூக விடுதலை இல்லாத தேசிய விடுதலை, விடுதலையே அல்ல. இந்த விளக்கத்தோடு உள்ளூரில் காணப்படும் சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் போராட வேண்டிய பொறுப்பு தமிழ் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் உண்டு. மத முரண்பாடு.சாதி முரண்பாடு நாவற்குழி, தையிட்டி வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை போன்ற அனைத்து அம்சங்களும் தமிழ்மக்களின் கவனத்தை அவ்வப் போது சிதறடிக்கின்றன. இவற்றிற்கு எதிராக தனித்தனியாக போராட்டத் தேவையில்லை. இவை அனைத்தும் தேச நிர்மானத்துக்கு ஏற்பட்ட சவால்களே. எனவே தேசத்தை ஜனநாயக அடிச்சட்டத்தின் மீது கட்டியெழுப்பும் போது இந்த விடயங்களை எதிர் கொள்வதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளும் (22ம் பக்கம் பார்க்க)

# தமிழ் இசை கலாமன்றம்

தலைவணங்கி



பூமிப் பந்தின் எத்திசைக்கும் தமிழுக்குத் தடம்பதித்த
தெய்வத்தமிழ் புலவன், தத்துவமெய்ஞானி
**வள்ளுவனுக்கு** புகழ்சேர்க்க
படம் பதிக்கும் நன்நாளும்,
கலைநிகழ்ச்சியும்

காலம்: வைகாசி(May) 14, 2023
நேரம்: மாலை 4:30 மணி
இடம்: தமிழ் கலை அரங்கு
1220 Tapscot Road, Scarborough.




அனுமதி இலவசம்: அனைவரும் வருக தமிழர் தலைமகனை வணங்க.

# கன்பூசியஸ் நிலையம்:- சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு ஊடுருவல் கருவி?

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



அமெரிக்காவிற்கு சவால் விடுக்கும் ஒரு சக்தியாக சீனா எழுச்சியடைந்து வருகின்றது. இதில் தற்போது எவருக்குமே சந்தேகமில்லை. இன்றைய சீனாவின் எழுச்சியின் முதல் பகுதி டெங்சியோ ஒபியின் காலமென்றால், அதன் அடுத்த கட்டத்தை நகர்த்துபவராக தற்போதைத சீனத் தலைவர் சி.ஜின்பிங்கின் இருக்கின்றார்.

சீன வரலாற்றில் மாவோவிற்கு பின்னர் மிகவும் செல்வாக்கு மிக்க தலைவராக சி.ஜின்பிங் நோக்கப்படுகின்றார். சீனாவை ஒரு மேலாதிக்க சக்தியாக எழுச்சியடைச் செய்யும் இலக்கில், ஜின்பிங்கின் நிர்வாகமானது, ஆக்கோரசமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால், அமெரிக்க சீன போட்டியே இன்றைய சர்வதேச அரசியல் விவாதங்களை ஆக்கிரமித்திருக்கின்றது.

ஆனால் அமெரிக்க சீன முறுகல் நிலை பனிப்போர் நிலையை எட்டவில்லையென்றும் இல்லை பனிப்போர் நிலையை நோக்கி உலகம் நகரத் தொடங்கி விட்டதாகவும் இரு வேறு பார்வைகளில் விவாதிப்போருண்டு.

அண்மையில் அமெரிக்க வான் பரப்பின் மீது பறந்த சீன உளவு பலூன்கள் அமெரிக்காவினால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இது ஒரு வகையான பனிப்போர் அரசியலை நினைவுபடுத்துவதாகவே இருக்கின்றது. தாய்வான் விடயத்தில் அமெரிக்கா காண்பித்து வரும் ஈடுபாட்டை, சீனா தொடர்ந்தும் எதிர்த்து வருகின்றது. அமெரிக்காவின் சபாநாயகர் நான்சி பலுசி, தாய்வானுக்கு விஜயம் செய்ததை தொடர்ந்து, தாய்வான் விடயத்தில் சீனா கடும் தொனியிலேயே பேசி வருகின்றது. தாய்வான் விடயத்தில் தலையிடுவோர் அதன் விலையை கொடுக்க நேரிடுமென்று சீனா அவ்வப்போது எச்சரித்து வருகின்றது. ஆனால், தாய்வானுடனான அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ உறவுகளை அமெரிக்கா, தொடர்ந்தும் பலப்படுத்தி வருகின்றது.




சீனா அடிப்படையில் ஒரு சர்வாதிகார அரசியல் கட்டமைப்பை கொண்டிருக்கும் நாடாகும். இந்த பின்புலத்தில் நோக்கினால், சீனாவின் அரசியலும், இந்திய, அமெரிக்க மற்றும் மேற்குலகத்தின் அரசியல் அணுகுமுறைகளும் தலைகீழானது. அமெரிக்க சீன போட்டியென்பது வெறுமனே பொருளாதார மற்றும், அதிகார போட்டியல்ல மாறாக, இரண்டு அரசியல் முறைமைகளுக்கிடையிலான போட்டியாகும்.

அதாவது, சர்வாதிகார அரசியல் கட்டமைப்பிற்கும் தாராளவாத ஜனநாயக கட்டமைப்பிற்கும் இடையிலான மோதலாகும். கம்யூனிச சர்வாதிகார கட்டமைப்பின் மூலம் வளர்சியடைந்திருக்கும் சீனா, அதனை உலகெங்கும் பரவல்படுத்தவும், அதனை நியாயப்படுத்துவதற்கான செயற்பாடுகளையும் தீவிரப்படுத்தியிருக்கின்றது. இந்த பின்புலத்தில் தான், சீனாவின் கன்பூசியஸ் நிலையத்தின் செயற்பாடுகள் உற்று நோக்கப்படுகின்றன.

2004இல் ஆரம்பிக்கப்பட்ட சீன, கன்பூசியஸ் நிலையம், தற்போது 160இற்கு மேற்பட்ட நாடுகளில் அதன் செயற்பாடுகளை விஸ்தரித்திருக்கின்றது. உலகெங்கும் 400இற்கு மேற்பட்ட கன்பூசியஸ் நிலையங்கள் இது வரையில் நிறுவப்பட்டுள்ளன. ஹன்பானா என்னும் அரசு சாரா, அரசாங்க அமைப்பொன்றே இதன் தலைமைக் காரியாலயமாக இருக்கின்றது. இதன் இயக்குனராக இருப்பவர், சின கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் பீடத்தின் உறுப்பினராவார். இது சீன கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றது. இதில் சீன கம்யூனிஸ் கட்சியின் முக்கிய தலைவர்கள் உள்ள



டக்கப்பட்டிருக்கின்றனர். 2013இல், கன்பூ சியஸ் நிலையங்களின் ஊடாக, சீனா பற்றிய நல்ல பார்வைகளை வழங்குங்கள் என்று, ஜின்பிங், உத்தர விட்டார். ஏனைய நாடுகளுக்குள் இலகுவாக ஊடுருவவும் நோக்கிலேயே, கன்பூசி யஸ் நிலையம் என்னும் பெயர் தெரிவு செய்யப்பட்டது. 2014இல் சைனா போஸ்ட் பத்திரிகையில் வெளி வந்த கட்டுரையொன்றின்படி, கன்பூஸியசுக்கு பதிலாக, மாவோ அல்லது, டென்சியோ ஒபிக்கின் பெயர் இந்த நிலையத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தால், இந்த விடயத்தில், இந்தளவு முன்னேறியிருக்க முடியாதென்று குறித்த பத்திரிகை சுட்டிக் காட்டியிருந்தது.

ஏனெனில் மாவோவின் வழியாக சீனா தொடர்பான உலகப் பார்வை எதிர்மறையாக இருக்கின்றது. இந்த எதிர்மறையான சிந்தனையை போக்குவதற்கான ஒரு கருவியே கன்பூசியஸ் நிலையம். இந்த நிலையத்தின் மூலம், சீனா தொடர்பில் நிலவிவரும் விமர்சனங்கள், குறிப்பாக தியன்மன் சதுக்க கொலைகள், சீனாவின் மனித உரிமைகளுக்கு எதிரான கொள்கைள், சர்வாதிகார ஆட்சிக் கட்டமைப்பு போன்றவை தொடர்பில், சாதகமான அபிப்பிராயத்தை மேற்குலக மாணவர்களுக்குள் புகுத்துவதற்கான ஒரு கருவியாகவே கன்பூசியஸ் நிலையத்தை சீனா பயன்படுத்தி வருவதான குற்றச்சாட்டுக்கள் வலுவடைந்திருக்கின்றன.

அதே வேளை சீன உளவுச் செயற்பாடுகளுக்கான ஒரு தளமாகவும் இந்த நிலையங்கள் பயன்படுத்தப்படுவதாக மேற்குலக பாதுகாப்பு நிபுனர்கள் எச்சரிக்கின்றனர்.

2013இல், சிக்காக்கோ பல்கலைக்கழக்கத்தை சேர்ந்த பேராசிரியர், மார்ஷல் சாஹ்லின்ஸ், கன்பூசியஸ் நிலையம் சிக்காக்கோ பல்கலைக் கழக்கத்தில் எவ்வாறு நடந்து கொள்கின்றது, நிலையத்தின் தீர்மானங்களின் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் பீடம் எவ்வாறு தலையீடு செய்கின்றது போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவான கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தார்.

2019இல் அமெரிக்க செனட், கன்பூசியஸ் நிலையங்களுக்கான அனுமதியை மறு பரீசீலனை செய்ய வேண்டுமென்று அறிக்கையிட்டிருந்தது. கன்பூசியஸ் நிலையம் சீனாவின் பிரச்சாரத்திற்கான ஒரு தளமாக பயன்படுத்தப்படுவதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் 2020இல் அறிவித்தது. தற்போது, பிரித்தானியாவில், இந்த விடயம் ஒரு அரசியல் விவாதமாக மாறியிருக்கின் றது.

பிரித்தானியாவில், 30 பல்கலைக்கழகங்களில் கன்பூசியஸ் நிலையங்கள் இயங்கி வருகின்றன. கன்பூசியஸ் நிலையங்களின் செயற்பாடுகள் பிரித்தானிய சட்ட நடைமுறைகளுக்கு மாறாக முன்னெடுக்கப்படுவதாக தற்போது, கண்டறியப்பட்டுள்ளது. பிரித்தானிய பல்கலைக்கழங்களில் பின்பற்றப்படும் கருத்துச் சுதந்திர நடைமுறைகளுக்கு மாறாக கன்பூசியஸ் நிலையங்களின் நடவடிக்கைகள் அமைந்திருப்பதாக குற்றச்சாட்டுக்கள் பரவலாக எழுந்திருக்கின்றன.

இதன் மூலம், பிரித்தானியாவின் சிவில் சுதந்திரம் கேள்விக்குள்ளாகியுள்ளதாக கண்டறியப்பட்டதை தொடர்ந்து, பிரித்தானிய பிரதமர் அனைத்து கன்பூசியஸ் நிலையங்களையும் மூடுவதற்கான உத்தரவை பிறப்பித்திருக்கின்றார். சீனாவை பொறுத்த வரையில் அமெரிக்க மற்றும் மேற்குலகம் பனிப்போர் மனநிலையில் செயற்படுவதாக குற்றம் சாட்டி வருகின்றது. ஆனால் கன்பூசியஸ் நிலையங்களின் செயற்பாடுகளை, தொடர்சியாக, கண்காணித்ததன் மூலம், சில விடயங்களை பிரித்தானிய அதிகாரிகள் வெளியிட்டிருக்கின்றனர்.

அதாவது, கன்பூசியஸ் நிலையங்களுக்கான பணியாளர்கள் தேர்வு செய்யும் முறைமையானது, பிரித்தானிய சட்டங்களுக்கு முரணாணது. அதாவது, பணியாளர்களை தெரிவு செய்யும் போது அவர்களது அரசியல், பால் நிலைத் தெரிவு, மதம், இனவாத பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களா என்பதை நோக்குதல், அவர்களது அரசியல் நடத்தைகள் அத்துடன் பணிக்காலத்தில் குழந்தை பெற்றுக் கொள்வதில்லை என்னும் உறுதிமொழி போன்ற விடயங்களின் அடிப்படையிலேயே பணியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாறான நடைமுறை, பிரித்தானிய சட்டத்திற்கு முற்றிலும் முரணானது.

சீனாவின் மென்வலு அதிகாரத்தை விரிவாக்குவதற்கான ஒரு கருவியாகவே கன்பூசியஸ் நிலையங்கள் பயன் படுத்தப்படுகின்றன. அமெரிக்கா, கடனா, பிரித்தானியா மற்றும் ஏனைய மேற்குலக நாடுகளின் பல்கலைகழக நிர்வாகம் தற்போது விழிப்படைந்து விட்டது. சீனாவின் செல்வாக்கை விரிவாக்குவதற்கான கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு கருவியாகவே, கன்பூசியஸ் நிலையங்கள் பயன்படுத்தப் பட்டு வருவது, கண்டு கொள்ளப் பட்டதை தொடர்ந்து மேற்குலக நாடுகள் கன்பூசியஸ் நிலையங்களுக்கான அனுமதியை இரத்துச் செய்திருக்கின்றன.

கன்பூசியஸ் நிலையங்கள், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஊடுருவல் திட்டமென்னும் சர்ச்சைகள் எழுந்ததை தொடர்ந்து, இவற்றை ஆராய்வதற்கான சிறப்பு குழுவொன்றை இந்தியா நியமித்திருந்தது. இந்தியாவில் இரண்டு கன்பூசியஸ் நிலையங்கள் மட்டுமே இயங்கியிருக்கின்றது.

தெற்காசியாவில் அதன் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களை தேடிக் கொண்டிருக்கும் சீனா, தற்போது, இலங்கை பல்கலைக்கழங்களிலும் கன்பூசியஸ் நிலையங்களை ஆரம்பிப்பதில் அதிக ஆர்வத்தை காண்பித்து வருகின்றது. தென்னிலங்கையில் மூன்று நிலையங்களை இதுவரையில் நிறுவியிருக்கின்றது.

இதன் ஒரு பகுதியாக வடக்கு கிழக்கு பல்கலைக்கழங்களிலும் கன்பூசியஸ் நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளில் தீவிரம் காண்பித்து வருகின்றது. இது தொடர்பில் இரண்டு பல்கலைக்கழகங்களையும் அணுகியிருக்கின்றது. இந்த விடயத்தை நமது பல்கலைக்கழங்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன?

இந்த விடயத்தை சரியாக புரிந்து கொள்ளாமல் நமது பல்கலைக்கழங்கள் காலை விடுமாக இருந்தால், மேற்குலக பல்கலைக்கழங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் போன்று, ஒரு வேளை அதனை விடவும் சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிடலாம். வளர்ச்சியடைந்த நாடுகளின் பலக்லைக்கழகங்களே கன்பூசியஸ் நிலையத்தை கையாள முடியாமல் தடுமாறுகின்ற போது, வடக்கு மற்றும் கிழக்கு பல்கலைக்கழங்களால் எவ்வாறு இதனை எதிர்கொள்ள முடியும்?

ஒரு விடயத்தை சரியாக புரிந்து கொள்ள வேண்டும். மேற்குலக நாடுகளின் அல்லது இந்திய பல்கலைக் கழங்களோடு கல்விசார் தொடர்புகளை பேணுவதற்கும், சீனாவின் பல்கலைக் கழங்களோடு இணைந்து பணியாற்றுவதற்குமுள்ள சிக்கல்கள் மாறுபட்டது. மேற்குலக,

இந்திய பல்கலைக்கழகங்கள் சுயாதீனமானவை. ஜனநாயக கட்டமைப்புக்களின் கீழ் இயங்குபவை. எனவே அவ்வாறான பல்கலைக்கழங்களோடு இணைந்து பணியாற்றுவதில் அரசியல் ரீதியான சிக்கல்கள் இடம்பெறப் போவதில்லை. ஆனால் சீனாவின் பல்கலைக்கழங்களின் தீர்மானங்கள் சுயாதீனமானவை அல்ல. மாறாக, அனைத்துத் தீர்மானங்களுமே, கம்யூனிஸ் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால் சீனாவின் அனைத்து நிறுவனங்களுமே, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகார கட்டமைப்பிற்கான பிரச்சார நிறுவனங்கள் தான். இதனை புரிந்து கொண்டே, அகலக் காலை வைப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

# இந்திய அயலுறவு அதிகாரிகளின் தொலைநோக்கின்மையின் எடுத்துக்காட்டு

கட்டுரையாளர்:
தமிழ்நாட்டில் இருந்து
– பகவான்சிங் –



இலங்கையின் தமிழர்களில் 93 சதவிகிதம் பேர் வடக்கு மாகாணத்தில் தான் வசித்து வந்தனர். இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்குமான உறவுகளை வலுப்படுத்துவதில் இந்த இரு தொப்புள் கொடி உறவுகளையும் வலுபடுத்தும் இந்த விமான சேவையின் பங்கு மகத்தானது. இருந்தும், ஈழப்போர் முடிவுக்கு (மே 2009) பிறகு பத்தாண்டு கள் கழித்துத் தான் 2019 இல் தான், இந்தியாவும் இலங்கையும் மீண்டும் இந்தச் சேவையைத் தொடங்கின.


2019 அக்டோபர் 17 அன்று பலாலியில் கூடிய அந்தப் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் அமர்ந்து நான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உற்சாகமூட்டும் உரையைக் கேட்கும் போது, வானத்தில் மிதந்தேன். அப்போது, இந்திய அரசுக்குச் சொந்தமாக இருந்த எயர் இன்டியாவின் துணை நிறுவனமான ‘அலையன்ஸ் எயர்’ நிறுவனத்தின் யாழ்ப்பாணம் – சென்னை –யாழ்ப்பாணம் விமானச் சேவையின் மீட்சியைக் கொண்டாடும் ஒரு நிகழ்ச்சிஅது.

அந்தத் தொடக்க விமானப் பயணத்தின் ஓர் அங்கமாக, இந்திய பத்திரிகையாளர்களில் ஒருவனாக அந்த உணர்ச்சிபூர்வமான தருணத்தில் பங்கெடுக்க நானும் சென்றிருந்தேன்.

சுமார் ஐம்பது நிமிட நேரம் கொண்ட அந்தப் பயணத்திற்குப் பிறகு, இலங்கை அதிபர், இந்தியதூதர் உட்படப் பலர் உரையாற்றினர். இராமேஸ்வரத்திலிருந்து ஒரு மணி நேரப் படகுச் சவாரி தூரத்தில் இருக்கும் இந்தச் சிறிய அழகிய தீவில் உள்ள தமிழர்களுக்கும் அவர்களின் தொப்புள் கொடி உறவுகளான இந்தியத் தமிழர்களுக்குமான தொடர்பை மேம்படுத்தும் ஓர் எஞ்சினாக இந்த விமான சேவை இருக்கும் என்று இந்திய தூதர் தமது உரையில் குறிப்பிட்டார்.

இந்த நல்லுறவால், போர்க்கால வடுக்களால் இன்னும் துன்புற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிக்கக்கூடிய இந்திய முதலீடுகள், இலங்கையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என்று, அன்று மைக்கில் பேசிய தலைவர்கள் பெருமையாகக் கொண்டாடியதில் நியாயமிருந்தது.







அடுத்த சில மாதங்களுக்குள் கோவிட் பெருந்தொற்றைக் காரணம் காட்டி இந்த விமான சேவை முடக்கப்பட்டது. கடந்த ஆண்டு டிசம்பரில் இது மீண்டும் துவக்கப்பட்டபோது, இரு நாடுகளிடையேயான பாரம்பரிய நட்பும் மக்கள் தொடர்பும் புதிய அத்தியாயத்தை நோக்கிப் பீடு நடை போடும் என்று நான் நம்பினேன். மேலும், இது பிராந்திய பாதுகாப்பை வலுப்படுத்தும் என்றும், கடனில் மூழ்கி, மோசமான பொருளாதார வீழ்ச்சியில் சிக்கியிருக்கும் இலங்கையைக் கபளீகரம் செய்யும் சீன வியூகங்களைத் தகர்த்தெறியும் என்றும் நான் நம்பினேன். இந்த வலுவடைந்த தொப்புள்கொடி உறவுகள், இந்துமா கடல் பிராந்தியத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த இந்தியா எடுக்கும் முயற்சிகளுக்குத் துணை நிற்கும் என்றும் எண்ணினேன்.

கடந்த டிசம்பர் 12ஆம் திகதி நான் இத்தகைய மகத்தான பல கனவுகளில் மிதந்திருந்தேன். சரி, இப்போது நான் இப்படிப் புலம்பும்படி என்ன நடந்து விட்டது?

அண்மையில், நண்பர் ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்திருந்தார். உரையாடலின் போது நாங்கள் விவாதித்த பல விஷயங்களில் ஒன்று,

யாழ்ப்பாணம் – சென்னை – யாழ்ப்பாணம் விமான சேவைக் கட்டணம் பற்றியது. கடந்த ஆண்டு டிசம்பரில் இந்த விமானச் சேவை மீண்டும் தொடங்கப்பட்ட போது 58,000 இலங்கை ரூபாய்கள் இதன் கட்டணமாக இருந்தது. பின்னர், அது, 52,000 ஆகக் குறைக்கப்பட்டு, அதன் பிறகு 50,000 ரூபாய்கள் வரை வந்தது. இப்போது, ஏப்ரல் 21 முதல், இந்தக் கட்டணம் 63,500 ரூபாய்களாக உயர்த்தப்பட்டுள்ளதுடன், செக் இன் லக்கேஜ் வரம்பு 20 கிலோ என்றும் ஹண்ட் லக்கேஜ் வரம்பு 5 கிலோ என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், கொழும்பு – சென்னை கொழும்பு கட்டணம் 51,000 இலங்கை ரூபாய்கள் தான். அதைத் தவிர, அதில், செக் இன் லக்கேஜ் வரம்பு 30 கிலோவாகவும் ஹண்ட் லக்கேஜ் வரம்பு7 கிலோவாகவும் உள்ளது.

எனது யாழ்ப்பாண நண்பர், யாழ்ப்பாணத்திலிருந்து சென்னை வந்து, பின்னர் சென்னையிலிருந்து கொழும்பு சென்று, கொழும்பிலிருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணம் திரும்பிவர முடிவு செய்திருப்பதாகவும் கூறினார். கட்டணத்திலும் மிச்சம், லக்கேஜீம் அதிகம் கொண்டு செல்லலாம் என்றார். இந்தியஅரசுக்குச் சொந்தமான விமான சேவையில் யாழ் மக்களிடம் காட்டப்படும் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மை குறித்த அவரது வேதனையும் ஏமாற்றமும் நியாயமானதே.

தொலை நோக்குப் பார்வை இல்லாத விமான சேவை நிறுவனம் மற்றும் அதைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் அரசின் போக்கால் நான் வேதனை அடைகிறேன். பழைய கட்டணங்களால் இழப்பு ஏற்படுகிறது, கட்டண உயர்வால் மட்டுமே லாபமீட்டமுடியும் என்றாலும், இலங்கையின் மீதான இந்தியாவின் செல்வாக்குக்கு மிகவும் முக்கியமான யாழ் மக்களின் உறவை வலுப்படுத்துவதற்கு, இந்தச் சிறிய இழப்பை இந்திய அரசு ஏற்றால் என்ன?

யாழ் –சென்னை–யாழ் விமான சேவை வெறும் வர்த்தக ரீதியாக மட்டும் பார்க்கப்படாமல், பிராந்தியத்தில் இந்தியாவின் நீண்டகால பாதுகாப்பு மற்றும் ராஜரீக அணுகுமுறையாகப் பார்க்கப்பட வேண்








டியது அவசியமில்லையா?

ஈழப்போர் மற்றும் அதன் அவலங்கள் குறித்துச் செய்தி சேகரிக்க நான் மேற்கொண்ட எண்ணற்ற இலங்கைப் பயணங்களில் ஒன்றின்போது நிகழ்ந்த ஒரு சுவாரஸ்யமான நிகழ்வை இங்கு நான் நினைவு கூருகிறேன். தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்துப் புகழின் உச்சியில் அதிபர் மஹிந்த ராஜபக்ச இருந்த 2010ஜனவரியில் தனது அலரி மாளிகை இல்லத்தில் எனக்கு, மதிய உணவுடன் கூடிய ஒரு பிரத்தியேக பேட்டிக்கு அவர்ஒப்புதல் அளித்தார்.

சோறும் மீனும் நிறைந்த அந்த தடல்புடலான மதிய உணவுக்குப் பிறகு தொடங்கிய பேட்டியில் என் முதல் வரி, அதிபர் அவர்களே, இந்தியாவில் நாங்கள், உங்கள் மீது அதிருப்தியிலும் அச்சத்திலும் இருக்கிறோம் என்பது தான்.

ஏன், ஏன்,ஏன்? என்று அவர் அவசரமாகக் கேட்டார் முந்தைய நாள் கொழும்பில் வந்திறங்கியதிலிருந்து, சாலைகள், நடைபாதைகள், கடைகள், உணவு விடுதிகள், பொதுஇடங்கள், நட்சத்திர விடுதிகள் எங்கு சென்றாலும் சீனர்களைக் கண்டேன். விமான நிலையத்திலிருந்து நகரத்துக்குள் வரும் சுப்பர் ஹைவே, கம்யூனிகேஷன் டவர் என, பெரும்பான்மையான உள்கட்டமைப்புத் திட்டங்களும் அவர்களுடையவையாகவே இருக்கின்றன. சீன விரிவாக்கத் திட்டங்களை, அதிலும் குறிப்பாக, இப் பிராந்தியத்தில் நன்கறிந்த இந்தியா, உங்களின் இந்த பீஜிங் சாய்வு குறித்து அச்சம் அடைவது இயல்பே என்று நான் பதிலளித்தேன்.

அவர் அமைதியான அளவான முறையில் பதிலைத் தரும் முன்னர், தனது வழக்கமான வெடிச்சிரிப்பு ஒன்றை உதிர்த்தார். எந்தத் திட்டத்திலெல்லாம் நீங்கள் சீன முத்திரையைப் பார்த்தீர்களோ, அவற்றுக்கெல்லாம் நான் முதலில் இந்தியாவிற்குத் தான் அழைப்பு விடுத்தேன். நீங்கள் அதை நிராகரித்து விட்

டீர்கள். என் நாட்டை நான் மேம்படுத்த வேண்டுமல்லவா? என்று கேட்டார்.

அன்று மாலை, அவர் இல்லத்திற்கு அருகில் உள்ள இந்திய தூதரகத்தின் மூத்த அதிகாரி ஒருவருடன் தேநீர் சந்திப்பின்போது மஹிந்தவுடனான இந்த உரையாடல் குறித்துக் கூறினேன்.

அதற்கு அந்த அதிகாரி அளித்த பதில், என்னை அதிர்ச்சியும் வேதனையும் அடையச் செய்தது, ஆமாம் ஆமாம், அவர் எல்லாவற்றையும் இலவசமாக எதிர்பார்க்கிறார். அது எப்படிசாத்தியம்? என்றார்.

எனது எதிர்வினையும் அவரை அதிர்ச்சியும் கோபமும் அடையச் செய்திருக்கக் கூடும். ஆதரவு நாடும் ஓர் அண்டை நாடு, அதிலும் அதைக் கொத்திப்போக, சீனா என்ற வல்லூறு காத்திருக்கும் வேளையில் இதுபோன்ற எந்த முதலீடும் இந்தியாவின் புவிசார் அரசியலுக்கு நன்மை பயக்கும் என்று நான் கூறினேன்.

‘சர்வதேச ராஜரீக அணுகுமுறை பற்றியும், இந்தியாவின் புவிசார் அரசியல் நன்மை குறித்தும் இந்த முட்டாள் பத்திரிகையாளனுக்கு என்ன தெரியும்? இதுபோன்ற உணர்திறன் மிக்க முக்கியமான விஷயங்களில் சிறப்புப் பயிற்சி பெற்று, இந்திய வெளியுறவுச் சேவையில் ஈடுபட்டிருக்கும் என்னைவிடத் தனக்கு அதிகம் தெரியும் என்று இவன் நினைக்கிறானா? என்று அந்த அதிகாரி எண்ணியிருக்கக்கூடும்.

அப்படி அவர் எண்ணியிருந்தால், அவர் தான் முட்டாள். நீண்ட காலமாக இவரும் இவரின் அயலுறவுச் சேவை சகாக்களும் இப்படிப்பட்ட தொலைநோக்கில்லாத முட்டாள்தனத்தால்

பீடிக்கப்பட்டுத் தான் இருந்தார்கள். வல்லரசுகள் மட்டுமல்லாமல், அண்டை நாடுகளுடனும் இந்தியா கொண்டிருந்த பலவீனமான உறவுகள் அதைத்தான் பிரதிபலிக்கின்றன.

இந்த யாழ் – சென்னை – யாழ் அலையன்ஸ் எயர் விமானச் சேவைக் கட்டண உயர்வு என்பது, இந்தியாவின் அகண்ட வெளியுறவு விவகாரங்களில் ஓர் அற்ப புள்ளியாகத் தோன்றலாம். ஆனால், அண்டை நாடுகளுடனான உறவில் இந்திய அயலுறவுச் சேவை அதிகாரிகளின் தொலைநோக்கற்ற அணுகுமுறைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

இந்திய தூதரகத்தில் உள்ளவர் எவரேனும் இந்த ‘ஈழநாடு’ கட்டுரையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, டில்லியில் உள்ள சம்பந்தப்பட்ட மூத்த அரசியல் தலைவர்களுக்கு அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். மாண்பு மிகு வெளியுறவுத் துறைஅமைச்சர் ஜெய்ஷங்கருக்கும், மாண்பு மிகு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் அனுப்ப, மொழிபெயர்க்கும் சுமைகூட இல்லை. அவர்கள் தமிழை நன்கறிவார்கள். மீண்டும் சந்திப்போம். வணக்கம்

# விளையாட்டு மைதானத்தில் வைத்து பொலிகண்டி மாணவிக்கு புதிய சம்மட்டியை அன்பளிப்புச் செய்த சிங்கள வீராங்கனை



அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்' வல்வெட்டித்துறை பொலிகண்டி விளையாட்டு வீராங்கனைக்கு புதிய சம்மட்டி ஒன்றை கொட்டாவ விளையாட்டு விராங்கனை அன்பளிப்பு செய்து அன்பின் மகத்துவத்தை உணர்த்தும் இந்தத் திருக்குறளை மெய்ப்பித்துள்ளார்.

16 வயது பாடசாலை மாணவி ஒருவரின் இரக்கக் குணம் கொண்ட இந்த செயல் அனைவருக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.

இந்த உணர்ச்சிபூர்வ, இரக்கக் குணம் கொண்ட நிகழ்வை கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டியின்போது தியகம விளையாட்டரங்கில் காணக்கூடியதாக இருந்தது.

18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் பங்கு பற்றிய பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த செல்வகுமார் செவ்வானம் 30.76 மீற்றர் தூரத்திற்கு சம்மட்டியை எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்றார். அதே போட்டியில் பங்கு பற்றிய கொட்டாவ, பன்னிப்பிட்டிய வடக்கு தர்மபால மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சானுமி டில்தினி பெரேரா (21.33 மீற்றர்) ஏழாம் இடத்தைப் பெற்றார்.


செவ்வானமோ துண்டுக் கம்பிகளைப் பிணைத்து செய்யப்பட்ட சம்மட்டியைக் கொண்டே வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத்தார். சானுமி டில்தினி பெரேரா புதிய உயர் ரக சம்மட்டியைக் கொண்டு 7ஆம் இடத்தையே பெற்றார்.

பொலிகண்டி மாணவியின் திறமையைக் கண்டு ஆச்சரியமடைந்த சானுமி டில்தினி பெரேரா, தனது சம்மட்டியை அவருக்கு அன்பளிப்பு செய்ய தீர்மானித்தார். இது குறித்து பெற்றோரிடமும் பயிற்றுநரிடமும் தனது எண்ணத்தை வெளியிட்டார். அவரது தந்தை, 'மகளே உன் விருப்பப்படி செய், உனக்கு நான் புதிய சம்மட்டி ஒன்றை வாங்கித் தருகிறேன்' என்றார்.

இதனை அடுத்து செவ்வானத்தை நோக்கிச் சென்ற சானுமி டில்தினி பெரேரா தனது புதிய, உயர்ரக சம்மட்டியை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்து எதிர்காலத்தில் வெற்றிவாகை சூடுமாறு வாழ்த்தினார். செவ்வானம் சானுமி டில்தினிக்கு நன்றி கூறியதுடன் இந்த உதவியை வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன் என்றார்.

உண்மையான அன்பையும் இரக்கக் குணத்தையும் யாராலும் அடக்கவும் முடியாது, மற்றையவரால் தடுக்கவும் முடியாது என்பதை 16 வயது பள்ளி மாணவி சானுமி டில்மினி பெரேரா இதன் மூலம் முழு இலங்கையருக்கும் உணர்த்தியுள்ளார்.

## பிரான்ஸ் ஜனாதிபதியால் பாராட்டுப் பெறும் ஈழத்தமிழ்மகன் தர்ஷன் செல்வராஜா!



பாரிசில் ஆண்டு தோறும் நடத்தப்படும் சிறந்த பாண் உற்பத்தியாளருக்கான போட்டியில், இந்த ஆண்டுக்கான விருதை வென்றிருக்கிறார் ஈழத்தைச் சேர்ந்த தர்ஷன் செல்வராஜா.

La meilleure baguette de Paris என்பது போட்டியின் பெயர். தமிழில் பாரிசின் சிறந்த பாண் என்று அர்த்தப்படும். 30வது முறையாக இடம் பெறும் இந்தப் போட்டியில், இம்முறை 126 பேர், பிரான்சின் பாரம்பரியம் மிக்க baguette பாணை தயாரித்து போட்டிக்கு அனுப்பியிருந்தனர். இதில் பாரிசின் 20 ஆம் வட்டாரத்தில் வெதுப்பகம் வைத்து நடத்திவரும், 30 வயதான தர்ஷன் செல்வராஜா தயாரித்த பாணின் தரம் மற்றும் சுவை நடுவர்களைக் கவர்ந்து முதல் பரிசை வென்றிருக்கிறது.




இதைவிட ஆச்சரியம் என்னவென்றால், பிரான்சின் ஜனாதிபதிக்கு அவரது எலிசே மாளிகையில் அடுத்து வரும் ஓர் ஆண்டு க்கு பாண் தயாரிக்கும் வாய்ப்பும் தர்ஷன் அவர்களுக்குக் கிட்டியிருக்கிறது.

RG Education Centers
Established in 1991
ஆர். ஜி. கல்வி நிலையம்
PAR EXCELLENCE

பாலர் வகுப்பு முதல் உயர்நிலை வகுப்புகள் வரை
அத்தியாவசிய கல்வித் தேவைகளுக்கு

3852 FINCH AVE EAST, SUITE 401
(One Block West of Kennedy)
Scarborough

தகவல் பெற உங்கள் பெயர், தொடர்பு இலக்கம் பதிவு செய்ய
416-609-9508 அல்லது 416-396-3224
email: info@rgeducation.com
மேலதிக விபரங்கட்கு www.rgeducation.com

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
14.12.1937

ஆண்டவன் அடியில்
23.04.2022

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும்
கட்டப்பிராயை வதிவிடமாகவும்
பிரான்ஸ் Cessonஐ வாழ்விடமாகவும் கொண்டிருந்த

## திருமதி நடராஜா (கம்பளை) இராஜபூபதி

## திதி:- 11.05.2023

அம்மா! ஆண்டொன்று ஆனதம்மா இன்று!
ஈன்றெம்மைப் பெற்றவளே!
உனை இழந்து! உமைப் பிரிந்தோம்!
பல நாள் ஊணுறக்கம் மறந்தோம்!
அன்னையாய் எமை சுமந்து
அரணமைத்து பாதுகாத்தாய்
அகம் நிறைந்து நாம் வாழ
மனமகிழ்ந்து பூரித்தாய்!
வார்த்தை இல்லாத
உங்கள் வடிவம் கண்டோம் அம்மா!
வர்ணிக்க முடியாத
வார்த்தைகள் கண்டோம் அம்மா!
அளவிட முடியாத உங்கள்
அன்பு கண்டோம் அம்மா!

சுயநலம் இல்லாத
இதயம் கண்டோம் அம்மா!
எமைப் பிரிந்தவளே!
ஏன் பிரிந்தாய்! ஐயமில்லை!
ஒன்று இரண்டு ஏன் ஓராயிரம் ஆண்டுகள்
கடந்தாலும் உமை மறவோம்
உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்வோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

தகவல்: குடும்பத்தினர்

தகவல்:- கோகிலராஜா 647 3387309
ஹீரஞ்சன் 44 7908 758991
கிருபாகரன் 33 618 010507

# மீறப்படும் மதச் சுதந்திரம்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு, அலங்கையை விசேட கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்குமாறு அமெரிக்க அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்திருக்கிறது. 2022ஆம் ஆண்டில் இலங்கையின் மத சுதந்திரம் கரிசனைக்குரியதாக இருந்தமையினாலேயே, இவ்வாறான பரிந்துரை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

2022ஆம் ஆண்டில் உலக நாடுகளில் மத சுதந்திரம் எவ்வாறான நிலையில் இருந்தது. அதனைச் சார்ந்து அமெரிக்க அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து, மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு, 98 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில், விரிவாக குறிப்பிட்டிருக்கிறது. இலங்கையின் மத சுதந்திர நிலை மோசமடைந்து வருகின்ற நிலையில், தான் இந்த அறிக்கை வெளியாகியிருக்கிறது. கடந்த ஆண்டின் நிலைமைகளைப் பற்றியே இந்த அறிக்கை விபரிக்கிறது.

இலங்கையில் இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மீது முன்னெடுக்கப்பட்டு வரும், அடக்குமுறைகளை இந்த அறிக்கை விபரிக்கிறது. குறிப்பாக, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர், இஸ்லாமியர்கள் கைது செய்யப்பட்டு, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பது, இஸ்லாமியர்களுக்கு எதிராக பல்வேறு அடக்குமுறைகள் முன்னெடுக்கப்படுவது,அரகலய போராட்டத்தில் ஈடுபட்ட மதகுருமார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தும் நடவடிக்கைகள் போன்றவை இந்த அறிக்கையில் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

அதேவேளை அமெரிக்க அறிக்கை சுட்டிக்காட்ட தவறிய இந்துக்கள் மீதான பௌத்த பேரினவாத நடவடிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. கடந்த ஆண்டில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் வீழ்ச்சி அடைந்த பின்னர், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றிருந்தார். எனினும் அவரது ஆட்சி காலத்தில் தமிழர்களின் குறிப்பாக இந்துக்களின் நலன்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது. அது அமெரிக்க அறிக்கையில் பெரிதாக கண்டு கொள்எப்படவில்லை.

மத சுதந்திரம் என்பது ஒரு மதத்தை பின்பற்றுவதற்கு உள்ள சுதந்திரம் அல்லது அந்த மதத்தை பின்பற்றுவதால் எந்த விதமான அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளாத நிலையைத் தான், மத சுதந்திரம் என்று குறிப்பிடலாம்.

இலங்கை ஒரு பௌத்த நாடு என்று சிங்கள பௌத்தர்கள் கூறுகிறார்கள். அங்கேயே ஏனைய மதங்களை பின்பற்றும் மக்களின் உரிமைகளும் சுதந்திரமும் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. ஒரு நாடு மதசார்பு அற்றதாக இருக்கும் போது தான், அங்கு மத சுதந்திரம் பேணப்படும் என்பது இலங்கையை பொறுத்த வரையில் சிங்கள பௌத்த நாடாக அடையாளப் படுத்தப்படும் சூழலில் ஏனைய மதங்களை மதிக்கின்ற, அவற்றின் சுயாதீன தன்மையை உறுதிப்படுத்துகின்ற சூழல் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அதுவும் தற்போது மத சுதந்திரம் மோசமான நிலையை அடைந்து கொண்டிருக்கிறது.

தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த தாயகத்தில் இப்போது அவர்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதற்கு மதம் ஒரு கருவியாக பயன் படுத்தப்படுகிறது. இதில் தொல்பொருள் திணைக்களம் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்து வருகிறது. தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடங்கள் புராதன பௌத்த விகாரைகளாக அடையாளப்படுத்தப்படுகிறது. அந்த இடங்களில் இருந்து தமிழர்களின் வழிபாட்டு விக்கிரகங்கள் அகற்றப்பட்டு விகாரைகளை அமைப்பதற்கு புத்தர் சிலைகளை நிறுவுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மட்டக்களப்பில், திருகோணமலையில் முல்லைத்தீவில், வவுனியாவில், மன்னாரில், யாழ்ப்பாணத்தில் என்று தமிழர் தாயக பகுதிகளில், இந்த மத ஆக்கிரமிப்பு தீவிரம் பெற்றிருக்கிறது.



 யாழ்ப்பாணத்தில் பௌத்தர்கள் நிரந்தரமாக வசிக்காத போதும், புதிது புதிதாக விகாரைகள் கட்டப்படுகின்றன. நாவற்குழியில் அரச காணியில் விகாரை கட்டப்பட்டது. தையிட்டியில் தனியார் காணியில் விகாரை அமைக்கப்பட்டிருக்கிறது. காணியை அபகரித்து பாரிய தூபி நெடுந்தீவில் வெடியரசன் கோட்டையை பௌத்த விகாரை எச்சமாக அறிவித்து, அங்கு விகாரை கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த நிலை பரவலாக காணப்படுகிறது.

பௌத்தர்கள் வசிக்காத இடங்களில் விகாரைகளை அமைப்பது, ஒரு ஆக்கிரமிப்புத் தான். அதுவும் தமிழரின் நிலங்களை அபகரித்து, விகாரைகளை அமைப்பது பாரதூரமான ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும். அவ்வாறான ஆக்கிரமிப்பு இப்போது பரவலாக இடம் பெறத் தொடங்கியிருக்கிறது. அதற்கெதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், அரச இயந்திரத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும். பௌத்த மயமாக்கலை முறியடிப்பது கடினமான காரியம்.

கத்தோலிக்க மக்களின் யாத்திரைத் தலமான கச்சதீவில் நிலை கொண்டுள்ள கடற்படையினர், புத்தர் சிலைகளை நிறுவிய தகவல் வெளியானதும், அதற்கு எதிர்ப்புகள் வெளியிடப்பட்டது.

இதனை அடுத்து அங்கிருந்து புத்தர் சிலைகள் அகற்றப்பட்டுள்ளதாக கடற்படையினரால், யாழ்ப்பாண ஆயர் இல்லத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், குருந்தூர் மலையில் இருந்து பிடுங்கியெறியப்பட்ட ஐயனார் ஆலயம் இருந்த இடத்தில் நீதிமன்ற கட்டளையை மீறி பௌத்த விகாரை கட்டப்பட்டிருக்கிறது.

வெடுக்குநாறிமலையில், உடைத்து அழிக்கப்பட்ட சிவலிங்கம் மற்றும் விக்கிரகங்கள் நீதிமன்ற அனுமதியுடன் மீள அமைக்கப்பட்ட போதும், அது நிரந்தரமானதாக நீடிக்குமா என்ற கேள்வி இருக்கிறது. கன்னியா வெந்நீரூற்று விகாரையாக மாற்றப்படுவதும்,செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமித்து விகாரை அமைக்கப்பட்டுள்ளதும், தையிட்டியில் தனியார் காணியை ஆக்கிரமித்து நிறுவப்பட்டுள்ள விகாரையும், இந்துக்களின் மீது முன்னெடுக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளாகும்.

இவை குறித்து அமெரிக்க அறிக்கை அதிகம் கண்டு கொள்ளவில்லை. இதனை அமெரிக்கா அக்கறை கொள்ளத் தவறிய விடயம் என்று கூறுவதை விட, தமிழர் தரப்பு இந்த விவகாரங்களை சர்வதேச மயப்படுத்துவதற்கு தவறியுள்ளது என்பதே உண்மை. இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்ட போது, சேதப்படுத்தப்பட்ட போது, அவற்றின் நிலங்களும், தமிழர்களின் நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்ட போது வெறும் கவனயீர்ப்பு போராட்டங்களுடன் நின்று கொண்டிருக்க கூடாது. அதனை சரியான இடங்களின் கவனத்துக்கு கொண்டு செல்வதற்கு தமிழர் தரப்பு எந்தளவுக்கு பணியாற்றியிருக்கிறது?

அண்மையில் கச்சதீவு புத்தர் சிலை விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்திய போது, கத்தோலிக்க மத பீடம், உரிய வழி முறைகளை கையாண்டதால் அந்த பிரச்சினைக்கு முடிவு கட்டப்பட்டது. அது போன்று பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக இந்துக்கள் செயற்படவில்லை என்ற குறை பலருக்கு காணப்படுகிறது. சிலர் இந்தியாவை நம்பியிருக்க வேண்டும் என்கிறார்கள். ஏனென்றால், இந்தியாவை ஆளும் பா.ஜ.க. இந்துத்துவ வலதுசாரி கட்சி என்பதால், இந்துக்களுக்கு அநீதி இழைக்கப்படும் எனத் தெரிந்தால் இந்தியா ஓடி வந்து உதவும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

இன்னொரு தரப்பு இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு என்பதால், இந்த விவகாரத்தில் தலையிடாது என்கிறது. எது எவ்வாறாயினும், இதுவரையில் பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக இந்தியா குரல் கொடுக்கவுமில்லை. அதனை தடுப்பதற்கு முயற்சிக்கவுமில்லை என்பதே உண்மை.

கச்சதீவு புத்தர் சிலை விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும் என்றும், இலங்கை அரசாங்கத்தைக் கண்டிக்க வேண்டும் என்றும் குரல்கள் எழுப்பப்பட்ட போதும், இந்தியா வெளிப்படையாக எதுவும் செய்யவில்லை.

கச்சதீவு புத்தர் சிலை அகற்றப்பட்டதில் இந்தியாவின் மறைமுக அழுத்தம் இருந்ததா என்று தெரியாது.


அவ்வாறு கச்சதீவு விவகாரத்தில் இந்தியா தலையிட்டு, புத்தர் சிலையை அகற்ற நடவடிக்கை எடுத்திருந்தால், குருந்தூர்மலை, வெடுக்குநாறி மலை விவகாரங்களில் இந்தியா ஏன் தலையிடவில்லை என்ற கேள்வி வருகிறது.

பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிரான தமிழர்கள் எழுப்பும் குரல் போதுமானதல்ல என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.


அது இந்தியா வரை கேட்டால் போதாது. வொசிங்டனையும், நியூயோர்க்கையும் நோக்கியதாகவும் இருக்க வேண்டும்.




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். உடல் ஆரோக்யம் உண்டாகும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். அலைச்சல் இருக்கும். பணவரவும் இருப்பதுடன் பயணங்கள் செல்லவும் நேரலாம். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதுரியத்தால் கூடுதல் லாபம் கிடைக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் சாதகமான பலன் தரும்.





ரிஷபராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நற்பலன்கள் உண்டாகும். வாழ்க்கையில் எதிர் பாராத திடீர் திருப்பங்கள் உண்டாகலாம். சந்திரன் சஞ்சாரத்தால் மனதுக்கு பிடித்தமான காரியங்களை செய்து மனநிறைவடைவீர்கள். வேலை தேடி கொண்டு இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். மனதில் இருந்த கவலைகள் நீங்கி அலுவலக வேலைகளில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத வளர்ச்சி ஏற்படும்.





மிதுனராசி அன்பர்களே! எண்ணிய காரியம் ஈடேறும். காரிய அனுகூலம் உண்டாகும். சந்திரன் சஞ்சாரத்தால் எதிர்பாராத சந்திப்புகள் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். தன்னம்பிக்கை உண்டாகும். அடுத்தவருக்கு உதவி செய்து அதன் மூலம் மதிப்பு உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். கை நழுவி சென்றவை முயற்சிகள் சாதகமான பலனை தரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.




கடகராசி அன்பர்களே! எதிலும் எச்சரிக்கையாக செயல்படுவது அவசியம். அடுத்தவரை நம்பி எதிலும் ஈடுபடாமல் இருப்பது நன்மையை தரும். ஆன்மிக ஸ்தலங்களுக்கு செல்வீர்கள். வழக்கு விவகாரங்கள் சாதகமாக முடியும். புதிய நண்பர்கள் மூலம் நன்மை உண்டாகும். தந்தையின் உடல்நிலையில் கவனமாக இருப்பது நல்லது. கடன் விவகாரங்கள் கால தாமதமாகும். வர வேண்டிய பணம் தாமதப்படலாம்.





சிம்மராசி அன்பர்களே! எந்த விஷயத்திலும் உடனடி தீர்வு காண முடியாத இழுபறி நிலை காணப்படும். ஆனால் இந்த நிலை மாறி நன்மை ஏற்படும். மனதில் திடீர் கவலை தோன்றும். சகோதரர் வழியில் மனவருத்தம் தரக்கூடிய சம்பவம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது.




கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். புதிய தொடர்புகள் உண்டாகும்.சிலர் புதிய வீடு கட்டும் பணியை தொடங்குவர். உத்யோகத்தில் பதவி உயர்வு, தேடி வரும். கனவு தொல்லையால் நீண்ட நேரம் கண் விழிக்க நேரிடும். தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. சகோதரர் வழியில் மனவருத்தம் உண்டாகலாம். திடீரென்று கவனம் தடு மாறலாம். தொழில் வியாபாரத்தில் உழைப்பிற்கு பின் நல்ல பலன் பெறுவார்கள்.





துலாம்ராசி அன்பர்கள் அனுகூலமான பலன்கள் உண்டாகும். எடுத்த காரியங்களில் தொய்வு ஏற்பட்டாலும் பின்னர் வேகம் பிடிக்கும். வீண்மனசஞ்சலம் உண்டாகும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். அதே நேரத்தில் புதிய வாடிக்கையாளர் பிடிக்க கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் தங்களது பணிகளை தாமதம் இல்லாமல் செய்து முடிப்பீர்கள். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குழந்தைகளால் மனசஞ்சலம் ஏற்பட்டு நீங்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! காரிய தடைகள் நீங்கும். திட்டமிட்டபடி எல்லாம் நடக்கும். ஆடம்பரமான பொருட்களை வாங்குவீர்கள். கடன் தொல்லை குறையும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத தடைகள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பணம் தாமதமாக வந்த சேரும். உத்யோகத்தில் பல தடைகளை சந்திக்க வேண்டி இருந்தாலும் முடிவில் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும். கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சுப செலவுகள் உண்டாகும்.








தனுசுராசி அன்பர்களே! மனோதைரியம் அதிகரிக்கும். வீண் கவலைகள் ஏற்பட்டு நீங்கும். வழக்கு விவகாரங்களை தள்ளி போடுவது நல்லது. திடீர் உடல்நலபாதிப்பு ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் நிதானமான போக்கு காணப்படும். பண வரத்து தாமதப்படும். தொழில் வியாபாரத்திற்காக கடன் வாங்க நினைப்பதை தள்ளி போடுவது நல்லது. உத்யோகத்தில் வேலை பளுவால் மனசலிப்பும் உண்டாகும். இறுதியில் இந்தநிலை மாறி நன்மை ஏற்படும்.




மகரராசி அன்பர்களே! சுப பலன்கள் உண்டாகும். எடுத்த காரியம் தாமதத்திற்கு பிறகு சாதகமான பலன் தரும். அவசரப்பட்டு வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத திடீர் செலவு உண்டாகலாம். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான விவகாரங்கள் தாமதமாக நடைபெறும். புதிய ஆர்டர்கள் கிடைத்தாலும் அதை உடனடியாக நிறைவேற்ற பாடுபட வேண்டி இருக்கும்.




கும்பராசி அன்பர்களே! மனதில் தைரியமும், உற்சாகமும் கூடும். சாதகமான பலன்கள் இருக்கும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வாய்க்கு ருசியாக உணவுகளை உண்பீர்கள். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வெளி வட்டார தொடர்புகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் பொறுப்புகள் அதிகரிக்கும். கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பண வரத்து திருப்திகரமாக இருக்கும்.




மீனராசி அன்பர்களே! எதிர்பார்த்த வேலைகள் வேகமாக நடந்து முடியும். இது வரை இருந்த அலைச்சல்களும் குறையும். செலவு அதிகரிக்கும் அதே நேரத்தில் வரவும் இருக்கும். யாருக்கும் எந்த வாக்குறுதியும் அளிக்காமல் இருப்பது நன்மை தரும். எதிர்ப்புகள் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றத்திற்கு தேவையான பண உதவி கிடைக்கும். உத்யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

## வெடுக்குநாறி மலையில் இருந்து....

(15ம் பக்கத் தொடர்ச்சி) உருவாக்கப்பட்டு விடும். இது மே மாதம். 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மத்தியில் இருந்த ஒரு கருநிலை அரசு தோற்கடிக்கப்பட்ட மாதம். யுத்தத்தை வெற்றி கொண்டவர்கள் நாங்கள் என்று தையிட்டியில் வைத்து ஒரு போலீஸ் அதிகாரி கூறுகிறார்.

அதன் பொருள் இது தான். நீங்கள் தேசமாக இருப்பதை நாங்கள் தோற்கடித்து விட்டோம் என்று பொருள். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் ஒரு தேசமாக மேலெழுவதைத் தோற்கடித்ததில் அரசாங்கத்தை விடவும் தமிழ்க் கட்சிகளுக்கே பங்கு அதிகம். இதை மறுவளமாகச் சொன்னால் தமிழ்மக்களை ஓரளவுக்காவது தேசமாகத் திரட்டியது அரசாங்கந் தான். ஒடுக்குமுறைதான் தமிழ்க் கட்சிகளை ஓர் உணர்ச்சிப் புள்ளியில் சந்திக்க வைக்கின்றது. தையிட்டியில் அது நடந்தது. மு.திருநாவுக்கரசு சிவத்தம்பி போன்றவர்கள் கூறுவது போல எதிரி தான் தமிழ்த் தேசியத்தின் பிரதான பலமா?

தியாகியாய், துரோகியாய், கைக்கூலியாய், ஒட்டுக்குழுவாய், வடக்காய், கிழக்காய், வன்னியாய், யாழ்ப்பாணமாய், கட்சியாய், சாதியாய், சமயமாய், இன்ன பிறவாய், சிதறிப் போகும் சிறிய தமிழ் மக்களால், அரசாங்கம் கட்டிக் கொண்டிருக்கும் விகாரைகளிலிருந்து ஒரு செங்கல்லைத் தானும் அசைக்க முடியுமா?

## தமிழர்களை அவர்களது தாயகத்தில் இருந்து வெளியேற்றவா புதிய புத்தர் கோவில்கள்?

(7ம் பக்கத் தொடர்ச்சி) தமிழ் மக்களை அவர்களது சொந்தப் பிரதேசங்களில் இருந்து விரட்டி விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களின் தனித்துவத்தையும் இல்லாமல் செய்வதற்கு முற்பட்ட வையுமே தமிழ் மக்களை சுயாட்சிக்காகவும் பின்னர் தனிநாட்டிற்காகவும் போராடும் சூழ்நிலைக்குத் தள்ளி யது.

இலங்கையின் தென்பகுதியில் இன மோதல்களை உருவாக்கி, தமிழர்களுக்கு அவர்களது தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்கு தான் பாதுகாப்பான பிரதேசம் என்ற அடிப்படையில் அவர்களை வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கு விரட்டியடித்ததுடன் அரசே கப்பல்கள் மூலம் தமிழ் மக்களை அப்பிரதேசங்களுக்கு அனுப்பியும் வைத்தது. இவ்வாறான நடவடிக்கைகள் அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடாக வலியுறுத்தப்பட்டது மான எமது தாயகபூமியான வடக்கு-கிழக்கிலிருந்தும் அரசின் நடவடிக்கையினூடாக நாம் விரட்டியடிக்கப் பட்டால் நாம் எங்கே செல்வது?

உலகின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டு மெனவும் சிறுபான்மை தேசிய இனங்கள் பாதுகாக்கப் படவேண்டும் எனவும் பழங்குடியின மக்கள் பாதுகாக்கப் படவேண்டும் என்றும் அழிவிலிருக்கின்ற உயிரினங்களும் தாவர இனங்களும் காப்பாற்றப் பட வேண்டும் என்றும் குரலெழுப்பும் ஐ.நா. சபையும் சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் இவ்வாறான விடயங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதும் கண்டிக்காமல் இருப்பதும் இலங்கை அரசின் தமிழர் விரோத செயற்பாட்டிற்கு உலகநாடுகளும் ஐ.நா. சபையும் துணைபோகின்றதா என்ற அச்சத்தையும் கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இப்பொழுது, வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, மிகப்பெருமளவிலான வேகமான சிங்கள பௌத்த மயமாக்கல் என்பது ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் காப்பாற்றப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் இருப்பு காப்பாற்றப்பட வேண்டுமாக இருந்தால், அவர்களின் மொழி, கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் அரசு தனது சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனைகளைக் கைவிட்டு சகல இனங்களும் இந்த மண்ணில் தமது சொந்தப் பிரதேசங்களில் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும். குறிப்பாக இந்தியா இந்த விடயங்களில் தனது தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றுள்ளது.

## நினைவேந்தலைக் கைப்பற்ற முன் பாராளுமன்றத்தைக்

(7ம் பக்கத் தொடர்ச்சி)இம்முறையும் மே 18 மிகவும் சமூகமான முறையிலே முள்ளிவாய்க்காலில் முன்னெடு க்கப்படவுள்ளது. நாங்கள் கடந்த காலங்களிலே சில துரதிஸ்டவசமான சம்பவங்களை உணர்ந்து கொண்டிருக்கின்றோம். திலீபனின் நினைவேந்தலாக இருக்கலாம், அன்னை பூபதியின் நினைவேந்தலாக இருக்கலாம், அனைத்து இடங்களிலுமே, குழப்பங்கள் விளைவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழர் தாயகத்திலே சர்வதேசத்திற்கு நாங்கள் நினை வேந்தலை மேற்கொள்ள வேண்டுமெனில், அந்த நினை வேந்தலிலே நாங்கள் ஒரு ஒற்றுமையாகச் செயற்பட்டால் மாத்திரமே எங்களுக்குரிய நீதி கிடைக்கப்பெறும். ரணில் ராஜபக்ச வினுடைய நரித் தந்திரங்களை புரியாது, எங்களுடைய தமிழ் பிரதிநிதிகள் ஏகோபித்த நிலையில், ஒருமித்துச் செயற்பட வேண்டும். மாறாக தனிவாத்தியம் இசைக்கக் கூடாது என்பதை மாணவர்களாக நாங்கள் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது அனைவராலும் மறுக்க முடியாததும் மறக்க முடியாததுமான ஒரு தொட்டுணர முடியாத மரபுரிமைச் சின்னமாக ஈழத் தமிழர்களின் வரலாற்று உணவாக அடுத்த சந்ததிக்குக் கடத்தப்பட வேண்டும்' என்றார்

தமிழர் பகுதிகளில் இடம்பெறும் நினைவேந்தல்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கைப்பற்ற வேண்டும் என அக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் கருத்தொன்றை வெளியிட்ட நிலையிலேயே, நினைவேந்தல்கள் தொடர்பில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம், தமிழ் சமூகத்திடம் இவ்வாறான கோரிக்கையொன்றை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 12வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


TAX CENTRIC
Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A, MISSISSAUGA, ON L5B 1N1
உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
Tel: 289.569.0169
Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph
Personal Tax
Corporate Tax
Book Keeping & Accounting
Payroll Services
GST/HST Filing
Corporate Services
Business Startup
Financial Planning


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.